பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 6 ஞாயிற்றுக்கிழமை (20.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 174

# பிரிட்டிஷ் அனைத்துக்கட்சி விசேட குழு

# இம்மாத இறுதியில் கொழும்பு வருகிறது

## லண்டன் மாநாட்டுக்கு முன்னோடியாக அரசு, புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு

கொழும்பு,மே20

பிரிட்டிஷ் அனைத்துக் கட்சிகளின் விசேட குழு ஒன்று இம்மாத இறுதியில் கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ளது.

லண்டனில் எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அரசு - விடுதலைப் புலிகள் - நோர்வே முத்தரப்புப் பேச்சுக்கு முன்னோடியாக இந்த விசேட குழு அரசாங்கப் பிரதிநிதிகளுடனும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்த இருப்பதாக நம்பகமாக அறியப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியும் கௌரவமுமான தீர்வைக் காணுவதற்கு [illegible]வும் பொருட்டு பிரிட்டிஷ் நாடாளு[illegible]றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒன்று இம்மாதம் முதலாம் திகதி நிறுவப்பட்டது. இக்குழுவின் தலைவராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கெய்த் வாஸ் பணியாற்றுகிறார்.

அடுத்த நாள் - மே மாதம் இரண்டாம் திகதி - இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுவது குறித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்று நடைபெற்றது. அதில் சகல கட்சிகளையும் சேர்ந்த அறுபது எம்.பிக்கள் கலந்துகொண்டனர். சுமார் நாலரை மணித்தியாலங்கள் விவாதம் நடைபெற்றது.

விவாதத்தின் போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை மீண்டும் முன்னெடுக்கும் பொருட்டு பிரிட்டன் அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்புகளுடனும் பேசுவதற்கு தயார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை இலங்கையில் சந்திப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தயார் என்று வெளிவிவகார அமைச்சர் ஹிம் ஹவெல்ஸ் தெரிவித்திருந்தார்.

இம்மாத இறுதியில் கொழும்பு வரும் அனைத்துக்கட்சி நாடாளுமன்ற விசேட குழு லண்டனில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முத்தரப்பு உச்சி மாநாட்டின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் 'கிபிர்' விமானங்கள் தாக்குதல்

கொழும்பு,மே20

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பிரதேசமக்கள் இடம்பெயர்ந்திருந்ததால் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## கப்பல் பயணத்துக்கு அனுமதி பெற முண்டியடிப்பு

யாழ்ப்பாணம்,மே20

வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு கப்பல் பயணப் பதிவை மேற்கொள்வதற்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்று யாழ். செயலகத்தில் கூடியிருந்தனர்.

ஏ-9 பிரதான வீதி மூடப்பட்டதை அடுத்து கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துச்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்குவதை தவிர்த்துச் செல்லும் போக்கில் இலங்கை அரசு

### ஒற்றையாட்சி குறித்தும் தெளிவில்லை என்கிறார் ஹரிஹரன்

புதுடில்லி,மே20

தமிழர் பிரதேசங்களுக்கு சுயாட்சி, தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து, வடக்கு - கிழக்கு ஆகிய முக்கிய விடயங்களை இப்போதைய இலங்கை அரசாங்கம் தவிர்த்துச் செல்லும் போக்கில் செயற்[illegible]டு வருகிறது -என்று தெற்காசியப் [illegible]ந்திய அதிகாரியும் இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரியுமான ஆர். ஹரிஹரன் தெரிவித்திருக்கிறார்.

ஒற்றையாட்சியின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கே இலங்கை அரசு முனைந்திருக்கிறது. ஆயினும் ஒற்றையாட்சியின் அர்த்தத்தை அதனால் தெளிவுபடுத்த முடியவில்லை என்றும்அவர் கருத்துக் கூறியியுள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் அதிக பலம் இருப்பதனால் அக்கட்சியால் மாத்திரமே இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை ஊடான போக்குவரத்தை சீராக்குவதற்கு செஞ்சிலுவை முயற்சி

### விடுதலைப் புலிகள் பாதுகாப்பு உத்தரவாதம்

கிளிநொச்சி,மே20

ஓமந்தை சோதனை நிலையம் ஊடான போக்குவரத்தை சீராக்குவதற்கு, விடுதலைப் புலிகள் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கியுள்ளனர் என்றும் அது எழுத்து மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும் சாத்தியம் உண்டு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வவுனியா, கிளிநொச்சி அலுவலகங்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானத்தை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினால் மட்டுமே தாம் பதில் தாக்குதலை நடத்துவதாக விடுதலைப் புலிகள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

படையினர் தாக்குதல் நடத்துவதில்லை என உத்தரவாதம் தரும் பட்சத்தில், தாமும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதற்குத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மின் விநியோகம் இரவில் இரண்டு மணிநேரம் வெட்டு

யாழ்ப்பாணம்,மே20

குடாநாட்டில் மின் விநியோகம் இரவு நேரங்களில் இரண்டு மணிநேரம் வெட்டப்படுவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கோம்பையன்மணல்,வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள மின் பரிமாற்று இயந்தியரங்கள் (Grids) மூலம் மின் விநியோகம் பெறுபவர்களுக்கு இரவு 7 மணி தொடக்கமும் -

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள மின் பரிமாற்று நிலையங்கள் ஊடாக மின்சாரம் விநியோகிக்கப்படும் இடங்கஞக்கு ஒன்றுவிட்ட ஒரு நாள் மாலை 6.30 மணி தொடக்கமும் - மின்வெட்டு அமுலாக்கப்படு கிறது.

யாழ். ஆஸ்பத்திரி மற்றும் நகரப் பகுதிகளுக்கு தொடர்ச்சியான இரண்டு மணி மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படுவதில்லை

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாலமோட்டையை நோக்கி நேற்று தொடர் ஷெல் வீச்சு

### மாங்குளம், மல்லாவிக்கு மக்கள் இடம்பெயர்வு

கிளிநொச்சி,மே20

வவுனியா பாலமோட்டைப் பகுதியை நோக்கி நேற்றுப் பிற்பகலில் இருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் இரவுவரை நடத்தப்பட்டது. அதனால் அப்பிரதேச மக்கள் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பாலமோட்டைப் பகுதியை நோக்கி தொடர் ஷெல் தாக்குதல்கள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

அதன் காரணமாக அப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து மாங்குளம், கனகராயன்குளம், மல்லாவி ஆகிய பகுதியை நோக்கிச் செல்வதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மன்னார் மாவட்டத்தில் மடு (08ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர்களை அழைத்துச் செல்வதற்காக ஓமந்தை சோதனை நிலையம் திறக்கப்பட்டது

வவுனியா,மே20

ஏ-9 பாதையில் ஓமந்தை சோதனை நிலையம் நேற்று மூன்றாவது நாளாகவும் மூடப்பட்டிருந்தபோதிலும் அவசர நோயாளர்கள் வவுனியாவுக்கு அழைத்துவரப்பட்டனர்.

ஓமந்தை சோதனை நிலையம் மூன்றாவது நாளாக பொதுமக்கள் போக்குவரத்துக்கு நேற்றும் மூடப்பட்டிருந்தது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்து அவசர நோயாளர்கள் 22 பேர் ஓமந்தை சோதனை நிலையம் ஊடாக வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதேபோன்று வவுனியாவில் சிகிச்சை பெற்ற 30 பேர் ஓமந்தை ஊடாக கிளிநொச்சி ஆஸ்பத்திரியைச் சென்றடைந்தனர்.

நோயாளர்களை அழைத்துச் செல்வதற்காக மட்டுமே நேற்றுப் பாதை திறக்கப்பட்டது. (அ-1)

## போதிய பாதுகாப்பும் உரிய வசதிகளுமின்றி மீளக்குடியமர தமிழ்க் குடும்பங்கள் மறுப்பு

திருகோணமலை,மே20

பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கினால் மட்டுமே மீளக் குடியேறமுடியும் என்று மூதூர் றால் குழிப் பகுதியைச் சேர்ந்த 170 தமிழ்க் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ நடவடிக்கை காரணமாக அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 170 குடும்பங்களும் இப்போது திருமலை நகரத்தில் தங்கியுள்ளன.

இந்தக் குடும்பங்களை மீளக்குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் உடன் சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும் கிண்ணியா பிரதேச செயலர் அக்குடும்பங்களை அறிவுறுத்தி உள்ளார்.

தமது பாதுகாப்பை உறுதி செய்வதுடன் அடிப்படை வசதிகளையும் செய்து தரும்பட்சத்திலேயே அங்கு மீளக்குடியமர முடியும் என அந்த மக்கள் பிரதேச செயலரிடம் தெரிவித்தனர்.

அதனையடுத்து, குறிப்பிட்ட பிரதேச மக்களின் விருப்பத்துக்கு மாறாக பலாத்காரமாக குடியேற்றவேண்டாம் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரிஷாத் பதியுதீன் திருகோணமலை அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-1)

## பலத்த பொலீஸ் காவலுடன் நேற்று தமிழக மீனவர் -பத்திரிகையாளர் சந்திப்பு

புதுடில்லி,மே20

சுமார் இரண்டரை மாதங்களின் பின்னர் திரும்பி வந்த இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுப்பலத்த பொலீஸ் பாதுகாப்பின் மத்தியில் சென்னையில் பத்திரிகையாளர்களைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்.

பொலீஸ் வாகனத்திலிருந்து இறங்கி வந்து செய்தியாளர்களுடன் பேசுவதற்கு மீனவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

தமிழக பொலீஸ டி.ஜீ.பி. முகர்ஜியின் அலுவலகத்தில், அவரது முன்னிலையிலேயே மீனவர்கள் பத்திரிகையாளருடன் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அப்போது அவர்கள் தங்களைக் கடத்தியது விடுதலைப் புலிகளே என்று தெரிவித்தனர்.

அக்குழுவினரின் தலைவர் என்று அறிமுகப்படுத்தப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம் கோடிமுனையைச் சேர்ந்த க்ளெமேண்ட்ஸ் என்பவர் தாங்கள் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டதையும் எவ்வளவு மன்றாடியும் தங்களை விடுவிக்க விடுதலைப் புலிகள் மறுத்துவிட்டதாகவும் விவரித்தார்.

சென்னை வந்ததிலிருந்து மீனவர்கள் முழு நேரமும் பொலீஸாரின் பாதுகாப்பிலேயே இருந்தனர். பொலீஸ் வாகனத்தில்

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்
**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்**
*வருடாந்த மஹோற்சவம் - 2007*

கொடியேற்றம் -21.05.2007 திங்கட்கிழமை மு.ப. 11மணி
தேர்த்திருவிழா - 30.05.2007 புதன்கிழமை மு.ப. 10 மணி)
தீர்த்தத் திருவிழா - 31.05.2007 வியாழக்கிழமை மு.ப. 11 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி/52459) **ஆலய பரிபாலன சபை.**

## நன்றி நவிலல்



எமது பாசமிகு தாயார்
*திருமதி* **நித்தியானந்தன் செல்லம்மா**

அவர்கள் நோயுற்று ஆனைப்பந்தி சுகந்தா வைத்திய நிலையத்திலும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றபோது, கரிசனையும், கடமையுணர்வும் பொங்க அவருக்குப் பரிவுடன் பணி செய்த வைத்தியப் பெருமக்களுக்கும் மற்றும் தாதியர், பணியாளர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை இத்தால் சமர்ப்பிக்கின்றோம்.

வைத்தியசாலைகளுக்கு வந்து எமது அன்னையின் நலனைக் கேட்டறிந்தோருக்கும், அவரது மரணச் செய்தி கேட்டு நேராக வந்தும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் கூறி எங்கள் ஆறாத் துயரில் பங்குபற்றிய அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**நித்தியானந்தன் குடும்பம்,**
*140/10, 4ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

சி/52452

## மரண அறிவித்தல்கள்

### *கந்தசாமி சுகந்தராஜ்*



நீர்வேலி வடக்கு, முன்கோடையைச் சேர்ந்த கந்தசாமி சுகந்தராஜ் 12.05.2007 சனிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லத்துரை கந்தசாமி (இராசேந்திரம் - பலாங்கொடை) - நீர்வேலியைச் சேர்ந்த இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் மோகன்ராஜ் (பிரான்ஸ்), ஆனந்தராஜ் (பிரான்ஸ்), லோகராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சயந்தினி, ரம்யா, வதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌதமராஜ், வினுராஜ், ராம்ராஜ், அசோக்ராஜ், நிலக்ஷன், கம்ஷிகன், தருண், மனுஷா ஆகியோரின் சித்தப்பாவும் காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மா, காலஞ்சென்ற இராசதுரை, மலர் (மருதகம்), செல்வநாயகம், அன்னலட்சுமி, கோணேசலிங்கம் அன்னலட்சுமி, கிருஷ்ணலிங்கம் விசயலட்சுமி ஆகியோரின் பெறாமகனும் செல்வராணி, முத்துக்கிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மருமகனும் ரமேஸ்வரன், ராஜேஸ்வரி, சபேசன், சைலன், சர்மிலா, மீனாம்பிகை, திலகாம்பிகை (சுவிஸ்), நிர்மலாம்பிகை (சுவிஸ்), பிரபாகரன், கிருபாகரன், பிரதீபா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் தயாளன், தயாளினி, காலஞ்சென்ற குணாளன், குணாளினி, நல்வதனி, கமலநாதன் (வைத்தியர்- யாழ். போதனா வைத்தியசாலை), கோணேஸ்வரன் (சுவிஸ்), ஈஸ்வரன் (சுவிஸ்), கௌரி, அகிலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2007) பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சிவியாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**செ.கந்தசாமி**
*(தந்தை - பலாங்கொடை)*

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி** (60762)

### *மாணிக்கம் நடராசா*



புலோலி மேற்கு, திருநாவலூரைப் பிறப்பிடமாகவும் நாவலடி, புலோலி மத்தியில் வசித்தவருமான மாணிக்கம் நடராசா 17.05.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பாறுபதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற திருமதி பாக்கியம், திருமதி தங்கம்மா இரத்தினசபாபதி, மாணிக்கம், கந்தசாமி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் தங்கவேலாயுதம், சுப்ரமணியம் (ஆசிரியர்- விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா) மகேந்திரம் (நோர்வே), சிவானந்தன் (நோர்வே), சிவமலர், ராணிமலர் (கனடா), ராஜினி (ஜேர்மனி), சாந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வவிநாயகம் (ஆசிரியர்- ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி), சிவகுமார் (கனடா), கேதீஸ் (ஜேர்மனி), கந்தசாமி (மூர்த்தி - நோர்வே), சுமதி, கலையரசி (ஆசிரியர்- விபுலானந்தக் கல்லூரி -வவுனியா), ஜெயகுமாரி (நோர்வே), கலைச்செல்வி (நோர்வே), கோமதி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் ஆர்த்திகா, ஐங்கரபாசன், கஜானவைகுந்தன், லம்போதரன், வித்திகா, வினோதினி, தர்ஷினி, சிவாகரன், ஜெயரூபன், மனோகரன், மயூரி, பபிகரன், கஸ்தூரி, சாயீந்திரன், ரஜீபன், ஜெனிசன், துவாகரன், சர்மிகா, மதுரன், பவித்திரன், வயித்தன், ஜீவிதன், றவிந்தன், மதுஷியா, ஹரிஸ், நினுஷன், மதுநிஷா, அஞ்சனா, நிதுஷன், கீர்த்திகா, ராகுல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**ப.செல்வவிநாயகம்**
*(மருமகன்).*

நாவலடி, புலோலி மத்தி. (சி/52453)

## ஒத்துமாறல்

மன்னார்
பேசாலை சென்.
மேரிஸ் பெண்கள்
வித்தியாலய
கலைப் பிரிவு
ஆசிரியை
யாழ்ப்பாணத்திற்கு
ஒத்துமாற
விரும்புகின்றார்.
*தொடர்பு:*
*0776914247*
M.சொலமன்
38, சுண்டுக்குளி
(60752)

## தேவை

ஸ்ரீலங்கா ரெலிக்
கொம் லைன்
தேவை.
*தொடர்பு:*
N.கண்ணன்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
தொ.பே. 0779103384
(60735)

முருகன் துணை

## உபநயன பிரம்மாபதேச சுப முகூர்த்த அழைப்பு



அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ மங்கலகரமான சர்வசித்து வருஷம் வைகாசி 6ஆம் நாள் இன்று 20.05.2007 ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் சித்தயோகமும் சதுர்த்தி திதியும் கூடிய சுபநாளில் காலை 07.40 முதல் முற்பகல் 10 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது ஜேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி

**அருளானந்தசர்மாவிற்கு**

சௌள யக்ஞோபவீத தாரண பிரம்மாபதேசம் ஞானப்பழனி முருகன் அருளாசியுடன் ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து சபையைச் சிறப்பித்துக் குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயன தீட்சாகுரு
*சிவப்பிரம்ம ஸ்ரீ நாகேந்திர.பாலசுப்பிரமணியக் குருக்கள்*

ஞானப்பழனி முருகன் கோயிலடி.
கோண்டாவில்- இருபாலை வீதி. கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

தங்கள் நல்வரவை நாடும்
(60739) ந.ஜெகதீஸ்வரக்குருக்கள்- ஜெயந்தி தம்பதிகள்.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



பல மாதகால இடைவெளியின் பின்
**விஜய், அசின், வடிவேல் நடித்த**
**போக்கிரி**
(நீல்ஸ்) தினசரி : 11மணி, 3மணி.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய, விசாகம்4 ஆம் பாதம்5' 4" உயரம், அழகிய ஆசிரியை மணமகளுக்கு உள்ளூர்அரச உத்தியோகம் அல்லது லண்டன், நியூசிலாந்து நாடுகளில் PR உடைய மணமகன் தேவை.

*தொடர்பு:*
**விளம்பர இல. 2972, மே/பா உதயன்**
(60698)

## ஒப்படைத்து உதவவும்

கொக்குவிலை [நாச்சிமார் கோயிலடி] சேர்ந்த பாலன் என்பவர் ஏறோலங்கா விமானத்தில் 24.04. 2007 அன்று பயணஞ்செய்த ஒருவரிடம் மேற்குறிப்பிட்ட முகவரியில் மருந்துப் பொதி ஒன்றை ஒப்படைக்கும் வண்ணம் கொடுத்திருந்தார். அது இதுவரை கொடுக்கவில்லை. தயவுசெய்து அப்பொதியைக் கொண்டுவந்தவர் தொடர்பு கொள்ளவும்.

*தொடர்பு:* 142,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
077 6172525
(60759)

## வீடு விற்பனைக்கு

சகல வசதியும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

முத்துமாரி அம்மன் வீதி, சிவன் அம்மன் றோட்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4590067
(60755)

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, கார் (wolkvagan ? sri ) மற்றும் பல விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

*முத்துமாரி அம்மன் மேற்கு வீதி,*
*சிவன் அம்மன் றோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 021 4590067*
(60756)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில்
ஆரம்பப்பிரிவுப் பகுதித்
தலைவராகக் கடமைபுரியும்
திருமதி த.சூரியகுமாரனின்
தந்தை
பொ. முத்துக்குமாரசுவாமி
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது பாடசாலையின் சார்பில்
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்.**
**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.**
(60760)

## மணமகள் தேவை

யாழ். உயர் இந்து கௌரவகுடும்பம் இலண்டனில் படித்துக் கொண்டு (Microsoft Professional) தொழில் புரியும் 30 வயது, ரோகிணி நட்சத்திரம் (பாவம் 37), உயரம் 5' 10" மணமகனுக்கு வெளிநாட்டில் PR உடைய மணமகள் தேவை.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:** +94115676922, +94786435964
**மின் அஞ்சல்:** ckspala@yahoo.com

## கண்ணீர் அஞ்சலி

**யாழ்.போதனா வைத்தியசாலையில்**
**தாதிய உத்தியோகத்தராகக்**
**கடமைபுரியும் திருமதி சிவபூபதி**
**ஜெயபாலன் அவர்களின் அன்புத் தாய்**
**காலமானதையிட்டுத்**
**துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்**
**தெரிவித்துக் கொள்கின்றோம்.**

யாழ்.போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

## உடன் தேவை

1. Data Entry Operator With Tamil Computer Typing
2. Accounts Clerk, With Computer Knowledge

தகமையுடையோர் 22.05.2007 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையில் கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

*Lukshmee Agency*
*S-Lon Delivery Centre*
*23/1, 4th Lane, Brown Road,* Human Resource Manager
*Jaffna,* (சி/52458)

## Annual General Meeting Old Girl's Association Vembadi Girls' High School

Based on the decision of the Executive Committee held on 14th of May 2007, the Annual General Meeting of the O.G.A. will be held on 23rd June 2007.

Amendments to the constitution must be forwarded to the secretary before 15th June 2007.

Attendance of the members solicited.

*Address:*
Dean
Faculty of Agriculture,
University of Jaffna, Thirunelvely.

Dr.Mrs.S. Sivachandiran,
*Secretary.*
(60761)

## மரண அறிவித்தல்கள்

### *வயிரவப்பிள்ளை சுப்பிரமணியம்*



பலாலியைப்பிறப்பிடமாகவும் இராசவீதி நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவப்பிள்ளை சுப்பிரமணியம் 19.05.2007 புதன்கிழமை காலை 10மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவப்பிள்ளை- கறுப்பாத்தையின்அன்பு மகனும் அன்னப்பிள்ளையின் அன்புக்கணவரும் பாஸ்கரன் (லண்டன்),உதயமலர், ஞானேஸ்வரி (ஜேர்மனி),சிவனேஸ்வரி,யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரிக்கா (ஜேர்மனி), சத்தியரூபன் (லண் டன்), சத்தியரூபி, சஞ்சயன் (டோகா), றஜீபன் (ஜேர்மனி), யூலியா (ஜேர்மனி), சகானா (ஜேர்மனி), தனுவிதன் (ஜேர்மனி), றஜித்தா, தம்மியா, றஜியா, ரஜீபன்,பசிர்தா ஆகியோரின் அன்புப்பேரனும் சுகினா, இரத்தினம், தவராசா(ஜேர்மனி), யசோதரன் (பிரான்ஸ்), இராசலிங்கம் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.05.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராச வீதி,*
*நவக்கிரி,புத்தூர்.* (60764)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### *கணபதிப்பிள்ளை நடராசா*



கிளாலியைப் பிறப்பிடமாகவும், பாலாவி தெற்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா 18.05.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் புவனேஸ்வரியின் அன்புத் தந்தையும் மகராசாவின் (லண்டன்) மாமனும் கோபு (லண்டன்), தபேதன் (லண்டன்), சுமன், தனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் சரஸ்வதிப்பிள்ளை செல்லம்மா, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாலாவி தெற்கு,**
**கொடிகாமம்.** (60763)

*தகவல்:*
**மனைவி, மகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்கள் இலங்கையில் நீடித்தால் அமெரிக்க அரசின் நிலைப்பாடு எவ்வாறு அமையும்?

**இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் சீர்குலைந்து போயுள்ள போர் நிறுத்தம் தொடர்பாகவும் 'ஆசியா பவுண்டேஷன்' அமைப்பின் சார்பில் ஆய்வு நடத்தியுள்ள முன்னர் இலங்கையில் அமெரிக்க தூதுவராகப் பணிபுரிந்த ஜெப்ரி லன்ஸ்ரெட் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையின் சில அம்சங்கள் இங்கே கட்டுரையாகத் தொகுத்து தரப்படுகின்றன.**



மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் எதுவும் செய்யாமலிருக்கிறது என்றோ அல்லது அதைவிட மோசமாக - அவைகளைக்கண்டுகொள்ளாமல் இருக்கிறது என்றோ அமெரிக்க அரசாங்கத்துக்குத் தோன்றுமானால் இலங்கை அரசாங்கம் சட்ட ரீதியாகவும் அரசியல் மட்டத்திலும் அதிகமான இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் இலங்கையில் முன்னர் அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றிய ஜெப்ரி லன்ஸ்ரெட்.

இலங்கையில் முன்னர் அமெரிக்க தூதுவராகக் கடமையாற்றியுள்ள ஜெப்ரி லன்ஸ்ரெட் தமது ஆய்வறிக்கை யொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**புலிகளுடன் தொடர்பு நீடித்திருந்தால்...**

ஜெப்ரி லன்ஸ்ரெட் தமது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

2003 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடித் தொடர்புகள் நீடித்திருந்தால் புலிகளை பயங்கரவாதத்திலிருந்து தூர விலகுவதற்கு அவர்களை இணங்க வைத்திருக்க முடியும். இந்த முயற்சி மேலும் மேம்பாடடையும்போது புலிகள் அமைப்பை வெளிநாட்டு பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்கவும் உதவியாய் இருந்திருக்கும்.

**புலிகளுக்கு ஒரு செய்தி**

இலங்கை அரசுக்கான அமெரிக்கப் பாதுகாப்பு உதவிகளை முழுமையாகப் பார்த்தால் பெரிய உதவி என்று கொள்ள முடியாது. ஆனால், மீண்டும் போருக்குத் திரும்பினால் எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை என்ற செய்தியை விடுதலைப்புலிகளுக்கு புரிய வைப்பதே இந்த உதவியின் நோக்கம். அதேவேளை, அமெரிக்கா வழங்கும் இராணுவ உதவி ஆதரவு உட்பட ஏனைய உதவிகள் இராணுவத்தீர்வைக் காணும்படியான ஊக்கமளிப்பாக அரசாங்கம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் அமெரிக்கா இலங்கை அரசுக்குத் தெளிவு படுத்தியுள்ளது.

2003ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற மநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதை அமெரிக்கா ஆதரித்தது. துரதிர்ஷ்டவசமாகப் புலிகள் கலந்துகொள்ளமுடியாமல் போயிற்று. அது கலந்துகொண்டிருந்தால் அமெரிக்க அரசு ஒரு கட்டுப்படுத்திய அளவிலாவது அதனுடன் ஒரு வகை தொடர்புகளை நீடித்துக்கொண்டிருக்கமுடியும்.

**இணைத்தலைமை நாடுகளின் நோக்கம்**

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான இணைத் தலைமை நாடுகளாக 2003 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் நியமிக்கப்பட்டிருந்தன.

இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் அமைதிச் செயற்பாட்டில் தொடர்ந்து ஈடுபட்டிருக்க ஊக்கமளிப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

இலங்கையில் சீர்குலைந்து வரும் அமைதியை மீள நிலைநிறுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் தனது இராஜதந்திர, பொருளாதார மற்றும் ஏனைய தனது வளங்களை எவ்வாறெல்லாம் பயன்படுத்தி வருகின்றது என்பது குறித்த உள்ளக விவரங்களை வெளிப்படுத்துவதாக இவ்வறிக்கை விளங்குகின்றது. இலங்கையின் அமைதி முயற்சியில் 2002 தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமெரிக்கா கொண்டிருந்த ஈடுபாடுகள் தொடர்பாக முன்னாள் தூதுவரின் அறிக்கை ஆராய்கின்றது. வாஷிங்டனிலும் ஒரு காரியாலத்தைக் கொண்டு இயங்குவதும் ஆஸியாவில் 17 வலை அமைப்பைக் கொண்டதுமான ஹசியா பவுண்டேஷன் நிறுவனத்தின் சார்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் தலைமையகம் சான் பிரான்ஸிஸ்கோவில் உள்ளது.

**இராணுவத் தீர்வுக்கு இடமே இல்லை**

முன்னாள் அமெரிக்க தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரெட் தமது அறிக்கையில் மேலும் பின்வருமாறு கூறியுள்ளார்:-

அமெரிக்கா முன்பும் தெளிவாகக் கூறியிருப்பது போல்

## ஆராய்கிறார் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி

இலங்கை இனப்பிணக்கிற்கு இராணுவத் தீர்வுக்கு இடமில்லை, கணிசமான அதிகாரப் பரவலை உள்ளடக்கிய அரசியல் வியூகமொன்றை அரசாங்கம் உருவாக்கிக்கொள்வது அவசியம்.

**அமெரிக்க அக்கறை எப்போது குறையும்.**

கால ஓட்டத்தில் அமெரிக்க கரிசனையையும் பின்நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் அமைதி முயற்சிக்கான வளங்கள் தொடர்பான அர்ப்பணிப்புக்களையும் நிலை நிறுத்திக் கொள்வது சவாலாகவே இருக்கப்போகின்றது. உலகளாவிய பயங்கரவாதத்துடன் இப்பிரச்சினை எந்தளவுக்கு தொடர்புபடுகின்றது என்பதைப் பொறுத்தே அமெரிக்காவின் அக்கறையும் அமையும்.

இலங்கையர்கள் தமது சொந்த மற்றும் குழு நலன்களை பெரும் இலட்சியங்களினின்றும் சிறியவையாகக் கருதி செயற்பட இயலாமையால் அமைதி முயற்சி சீர்குலைகின்றது என்ற நிலைதோன்றும்போது அமெரிக்காவின் அக்கறை குறைந்துவிடும்.

மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் எதுவும் செய்யாமல் இருக்கின்றது என்று தோன்றுமானால், அல்லது இன்னும் மோசமாக அவைகளைக் கண்டு கொள்ளாமல் இருக்குமானால் அமெரிக்காவின் இலங்கைக்கான ஆதரவு சட்ட மற்றும் அரசியல் இடையூறுகளினால் அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

**அமெரிக்க அக்கறைக்குக் காரணம்**

தென்னாசியாவில் ஏனைய நாடுகளுடன் உள்ளவாறு கேந்திர நலன்களை அடிப்படையாகக் கொண்ட இராணுவ உறவு இலங்கையுடன் அமெரிக்காவுக்கு இல்லை. ஆனால் இலங்கையின் சமாதான முயற்சிகளில் இரு காரணங்களுக்காக 2001ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா அக்கறைகொண்டுள்ளது. செப்ரெம்பர் 11ஆம் திகதிக்குப் பின்னர் சர்வதேச மட்டத்தில் பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவது என்ற அதன் உறுதிப்பாடு; மனித உரிமைகளை சகல இடங்களிலும் நிலைநாட்டுவது என்ற அக்கறை ஆகியவையே அந்த இரண்டு காரணங்களாகும். இலங்கையுடன் இராணுவ உறவுகளை சுமுகமாகக்கொண்டுள்ள போதிலும் பாகிஸ்தான், இந்தியா, ஆப்கானிஸ்தான் போன்று கேந்திரமுக்கியத்துவ நோக்கங்கள் கிடையாது.

திருகோணமலையை இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்துவது குறித்து அமெரிக்கா எதுவித ஆர்வமும் கொண்டிருக்கவில்லை.

திருகோணமலை முக்கிய கடல் பாதையில் அமைந்திருக்கவில்லை. அதன் உட்கட்டமைப்பு நான்றாக இல்லை. அதைவிட அது மோதல்கள் இடம்பெறும் பகுதியில் இருக்கிறது. மேலும் எந்நேரமும் அது புலிகளின் தாக்குதல்களுக்குள்ளாகலாம்.

இந்தியாவின் அயல்நாடொன்றில் தளமொன்றை அமைப்பதன் மூலம் புதுடில்லியைப் பகைத்துக் கொள்ள அமெரிக்கா விரும்பவில்லை.

இலங்கையுடனான அமெரிக்க வர்த்தகம் மிகக் குறைந்த முக்கியத்துவத்தையே கொண்டுள்ளது. இதைவிட சிறிய நாடான மலேசியாவுடன் குறிப்பிடத்தக்க வர்த்தகத்தைக் கொண்டுள்ளது.

இலங்கையின் பொருள்களுக்கான முக்கிய சந்தையாகவும் அமெரிக்கா விளங்கவில்லை. சிறிய அளவிலேயே அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்துள்ளன. இதற்கு யுத்தம் மட்டும் காரணமல்ல. திறமையற்ற அதிகார வர்க்கம், ஊழல் மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் அரசாங்கங்களும் இதற்குக் காரணம்.

இலங்கை குறித்த போதிய அக்கறை இல்லாது போனாலும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா பங்காளியாகவே இருக்கிறது.

**புலிகளால் நேரடி அச்சுறுத்தல் இல்லை**

விடுதலைப்புலிகள் இலங்கையைச் சேர்ந்த அமைப்பு என்ற காரணத்தினால் அமெரிக்காவுக்கு அவர்களால் நேரடியான அச்சுறுத்தல் இல்லை.

அவர்களைத் தொடர்ந்தும் தடை செய்ததின் மூலமும் கடுமையாக விமர்சித்ததின் மூலமும் இலங்கை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது. அதேசமயம் இலங்கை அரசு அரசியல் தீர்வை நோக்கி செல்ல வேண்டும் என கேட்டுவருகிறது.

**இலங்கைப் பிரதிநிதியின் கருத்து**

இந்த ஆய்வு அறிக்கை தொடர்பாக ஏசியா பவுண்டேஷன் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி நிலான் பெர்ணாண்டோ பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கடந்த பதினெட்டு மாதகாலத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை வெகுவாக விரிவடைந்துள்ளது. ஆனால், இவ்வாறான போர்களின் பின்னர் அமைதி நிலவும் ஒரு சுற்று ஓட்டத் தன்மையையும் நாம் முன்னரும் அவதானித்துள்ளோம்.

பிரச்சினைகள் தொடர்பான இம்மாதிரியான ஆய்வுகளின் நோக்கம் முன்னைய போர் நிறுத்தங்கள் பற்றி ஆராய்வதன் மூலம் பாடங்களைக் கற்றுக்கொள்ள இயலும். அதன் வாயிலாக, அடுத்தக் கட்டம் அமைதிக்கான யன்னல் திறக்கப்படும்போது இதில் சம்பந்தப்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச நடிகர்கள் சிறப்பான அம்சங்களைத் தெரிவு செய்து கொண்டு மேலும்அதிக ஆக்கபூர்வமாக செயற்படுவதற்கு உதவியாகவிருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

**தொகுப்பு: நந்தன்**

# பன்முக வித்தகராக மிளிர்ந்தவர் வரதர்; ஈழத்து இலக்கிய சகாப்தம் இவர்



கடந்த ஆண்டின் இறுதியுடன் ஈழத்து இலக்கிய தசாப்தமாக விளங்கிய தி.ச.வரதராசன் என்ற மூதறிஞர் வரதரின் இலக்கிய வாழ்வு நிறைவு பெறுகின்றது. 1924ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி பொன்னாலைக் கிராமத்தில் பிறந்து, 1940 ஆம் ஆண்டு தனது பதினா றாவது வயதில் ஈழத்துப் புனைக்கதைத்துறையுள் 'கல்யாணியின் காதல்' என்ற ஈழ கேசரி ஆண்டு மலர்ச் சிறுகதையுடன் பிரவேசித்தார். அன்றிலிருந்து 2006வரை வரதரின் பேனா மூடி வைக்கப்படவில்லை. வரதர் இலக்கியத்துறையில் காலடி எடுத்து வைத்த காலத் தில் காந்தியம், பாரதியம், பெரியாரியம் முதலான கருத்துக்கள் நில விக்கொண்டிருந்தன. பெரியாரின் பகுத்தறிவுப் பத்திரிகைகளும் அக்கால எழுத்துக்களும் அவரைப் பாதித்தன. தன் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியவற்றை எழுதிக் கொட்டித் தீர்த்துவிடும் ஆவேசம் வரதரிடம் இருந்தது. எனவே நிறையப் படித்தார். நிறையவே சிந்தித்து எழுதினார்.

வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்துச் சிறு கதை வரலாற்றை எழுதிவிட முடியாது. ஏனெனில் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் காலத்திலிருந்து வாழ்வின் கடைசி வரை வரதர் படைப்பாளியாகவே வாழ்ந்துள்ளார். அறுபதுக்கு மேற்பட்ட சிறுகதை களைப் படைத்தளித்துள்ள வரதர், கயமை மயக்கம் (வரதரின் சிறுகதைகள்) என்றொரு சிறுகதைத் தொகுதியைத் தந்துள்ள போதிலும் அவரின் வெளிவராதசிறுகதைகள் (தொகுதியிலடங்காதவை) ஏராளம் இன்னமும் உள்ளன.

**ஆறு தசாப்த காலப் பங்களிப்பு**

இலக்கியப் படைப்புக்கு ஓர் இலக்கு இருக்கவேண்டும். அந்த இலக்கு மனிதனுடைய அகத்தையோ புறத்தையோ உயர்த்துவதாக அமையவேண்டும் என்ற கருத்துடைய வரதர், தனது சிறுகதைகளைக் காலத்திற்கு காலம் மறுபரிசீலனை செய்து பார்த்துள்ளார். கடந்த ஆறு தசாப்தங்களாக அவரது சிறுகதைகள் ஈழத்திலக்கியத்திற்குப் பங் களிப்புச் செய்துள்ளன. அவரது உன்னத சிறுகதைகளை நோக்கில் 'மாதுளம்பழம்' என்ற சிறுகதையைச் சுதந்திரன் ஆண்டு மலரிலும் பிள்ளையார் கொடுத்தார். 'வீரம்' எனும் சிறுகதைகளைத் தினகரனிலும் 'வாத்தியார் அழுதார்' என்ற சிறுகதையை ஆனந்தனிலும் 'புதுயுகப்பெண்' என்ற சிறுகதையைக்கலைச்செல்வியிலும் 'கற்பு' என்ற உன்னதச் சிறுகதையை மத்திய தீபத்திலும் எழுதியுள்ளார்.

'1940 களிலிருந்தே சிறுகதை எழுதி வந்துள்ள வரதர், ஐம்பதுகளின் பிற்கூற்றில் ஏற்பட்ட இலக்கிய உத்வேக வளர்ச்சியின் பொழுது தனது படைப்பாளுமையை கற்பு, வீரம் போன்ற சிறுகதைகள் மூலம் பதிவு செய்துள்ளார்' எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார். தையலக்கா, கயமை மயக்கம் முதலான குறு நாவல்களையும் காவோலையில் பசுமை என்ற ஒரு நாவலையும் வரதர் படைத்தளித்துள்ளார்.

**பத்திரிகையாளர்**

பத்திரிகையாளராக வரதர் விளங்கியுள்ளார். ஈழத்து இலக்கியத்தில் தனித்துவமான பங்களிப்பினை ஆற்றிய 'மறுமலர்ச்சி' பத்திரிகையின் மூலவர் வரதரே. தமிழ் நாட்டிலிருந்து வரும் சஞ்சிகைகளைப் பார்க்கும் போதெல்லாம் யாழ்ப்பாணத்திலிருந்து இப்படி ஒரு சஞ்சிகையை வெளியிட வேண்டுமென்ற கனவின் வெளிப்பாடாக 'மறுமலர்ச்சி' அமைந்தது. மறுமலர்ச்சி 1946 இலிருந்து 1948 வரை இருபத்திநான்கு இதழ்கள் வெளிவந்து, இலக்கி உலகில் பெரும் சாதனை படைத்தது.

வரதரின் இதழியற் பணி மறு மலர்ச்சியுடன் நின்று விடவில்லை. வரதர் ஆண்டு மலர், ஆனந்தன், தேன்மொழி, வெள்ளி, புதினம், அறிவுக்களஞ்சியம், மீண்டும் மறுமலர்ச்சி என்பன அவர் வெளியிட்ட இதழ்களாகும். ஈழத்தின் ஒரேயொரு முத லாவது கவிதை இதழாகத் 'தேன்மொழி' அமைந்தது. 'மகாகவி' இந்த இதழின் துணை ஆசிரியராக விளங்கினார்.

**சிறந்த கவிஞர்**

வரதர் ஒரு கவிஞராக விளங்கினார் என்பதைப் பலரறிவர். ஆனால், அவர் ஓர் ஓவியராக விளங்கினார் என்பது பலரறி யாகச் சங்கதியாகும். ஈழத்தில் முதன்முதல் 'ஓர் இரவிலே' என்ற புதுக்கவிதையை எழு தியுள்ளார். சித்திரை இருபத்தெட்டில் ஏற்பட்ட குழப்பத்தில் மூன்று நான்கு நாள்களாக ஒரே அடை மழை. ஊரெல்லாம் பெருவெள்ளம். அவற்றுடன் புயலும் சேர்ந்து ஊரை ஓர் ஆட்டு ஆட்டியது. அதுகவிதையாக மலர்ந்தது.

மறுமலர்ச்சியில் 'அம்மான் மகள்' என்ற கவிதை யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் நயம்பட எழுதப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ஓசை நயத்தோடும், கற்பனை வளத்தோடும் அமைந்தன.

1995 ஒக்ரோபர் 30ஆம் திகதி வலிகாமம் மக்களின் பெரும் அவல இடம்பெயர்வை, ஒரு மனுக்குல சோக நாடகமாக நீண்ட கவிதையாக 'யாழ்ப்பாணத்தார் கண்ணீர்' எனப் படைத்தளித்துள்ளார். கவிதா ஆவேசத்தை இந்தக் கவிதைகளில் காணலாம். காலத்தோடு ஒட்டிய கவிதையாக இது அமைந்தது. வரதருடைய படைப்புகளில் ஏழு நூலாக்கம் பெற்றுள்ளன. நாவலர், வாழ்க நீசங்கிலி மன்னா, கயமை மயக்கம், மலரும் நினைவுகள், பாரதக் கதை, யாழ்ப்பாணத்தார் கண்ணீர், சிறுகதைப்பட்டறிவுக் குறிப்புகள் என்பனவாம். மல்லிகையில் வரதர் எழு திய 'தீ வாத்தியார்' பலராலும் சிலாகிக்கப்பட்ட புனைகதைசாராப்படைப்பாகும். இது 'மலரும் நினைவுகள்' என்ற தலைப் போடு நூலாக வெளி வந்தது.

**பதிப்பாசிரியர்**

வரதர் பல படைப்பாளிகளின் நூல்களை 'வரதர் பதிப்பாக' வெளியிட்டுள்ளார். இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை (இலக்கிய வழி), மஹாகவி (வள்ளி), பொன்முத்துக்குமரன் (தமிழ் மரபு), பேராசிரியர் கைலாசபதியின் ஒரு நூல், முருகையன் (கோபுரவாசல்) இவற்றோடு செங்கையாழியானின் பல நூல்கள், சோம கீரந்தனின் ஆகுதி சிறுகதைத் தொகுதி, சாந்தன், நாற்குழியூர் நடராசா ஆகியோரின் நூல்கள், சாமிஜியின் நூல்கள், வி.பொன்னம்பலத்தின் நூல் என்பன அவையாம். 'வரதரின் பல குறிப்பு' தமிழில் வந்த முதலாவது 'டிரக்ரரி' ஆகும்.

வரதர், அனைத்து எழுத்துலகக் குழுக்களினாலும் விரும்பப்பட்டவர். மதிக்கப்பட்டவர். தானே தனித்தோர் இலக்கிய இயக்கமாகவும் விளங்கியவர். நிறைவாழ்வு வாழ்ந்த (83 அகவை) இந்த மனிதரின் படைப்புகள் இவரது நினைவை என்றும் பேணி நிற்கும்.

**செங்கை ஆழியான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் மேற்கு
திருவருள்மிகு
## ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில்
## சர்வசித்து வருஷ மஹோற்சவம் - 2007

மேற்படி ஆலய மஹோற்சவம் 21ஆம் திகதி மே மாதம் 2007 திங்கட்கிழமை அன்று முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி 30ஆம் திகதி புதன்கிழமை விசாக தினத்தன்று தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும்.

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 21.05.2007 | திங்கள் | மு.ப. 10.30 மணி |
| சப்பரம் | 28.05.2007 | திங்கள் | பி.ப. 4 மணி |
| தேர் | 29.05.2007 | செவ்வாய் | மு.ப. 8 மணி |
| தீர்த்தவாரிதி | 30.05.2007 | புதன் | மு.ப. 10 மணி |

அனைத்து அடியார்களும் உற்சவ காலங்களில் பங்குபற்றி விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆலயகுருவும்
ஆதீன கர்த்தாவும்.

(60718)

# www.thaalee.com

This is the one and only Pioneer Matrimonial website providing Astrological Prediction, Mediation, Consultation and Match making to the Tamil Nation. By the famous Astrologer S.Sethurama Sarma J.P.

பல்லாயிரக்கணக்கான தோஷமுள்ள மற்றும் தோஷமில்லாத இருபாலாருடைய ஜாதகங்கள், படங்கள், Profileகள் என்பன என்னிடம் உண்டு. மேலும் நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டே, அகில உலகத்திலும் உள்ள மாப்பிள்ளைகள், மணப்பெண் போன்றவர்களுடைய முழு விவரங்களையும் எனது websiteஆகிய www.thaalee.com. என்பதில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். மேலும் உங்களுடைய Profileகளை, படம், ஜாதகம் என்பவற்றுடன் நீங்களாகவே www.thaalee.com. என்பதில் பிரசுரித்துக்கொள்ளலாம். மேலும் படம், ஜாதகம் விவரம் என்பவற்றை தபால்மூலமாக எனக்கு அனுப்பிவைக்கலாம்.

எனது விலாசம்: 45/1, Mathampitiya Road, Colombo-15.
Phone:2523127
E.mail:thaalee@yahoo.com

**சில மணமக்களுடைய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

1. யாழ்.இந்து கௌரவகுலம், 43 வயது, ரோகிணி நட்சத்திரம், London P.R.உள்ள Quantity Survey அழகான சிவந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. ID:285.
2. யாழ்.இந்து கௌரவகுலம், 27 வயது, பூரட்டாதிநட்சத்திரம், London Citizen B.Sc. பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. ID:879.
3. யாழ்.இந்து கௌரவகுலம், 35 வயது, அர்த்தநட்சத்திரம், British Citizen Accountant பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. ID:1105.
4. யாழ்.இந்து கௌரவகுலம், 34 வயது, பூராடநட்சத்திரம், B.Sc. in Computer Science, London மாப்பிள்ளைக்கு பெண் தேவை. ID:236.
5. யாழ்.இந்து கௌரவகுலம், 30 வயது, ஆயிலிய நட்சத்திரம், Australian Citizen, Engineer மாப்பிள்ளைக்கு பெண்தேவை. ID:418.

## கடைகள் வாடகைக்கு

மானிப்பாய், ஆலடிச் சந்தியில் நான்கு கடைகள் வாடகைக்கு உள்ளன.

ஐஸ்கிறீம் வியாபாரம், கொம்பியூட்டர் பிறின்ட், எலக்ரோனிக், பாமசி போன்றவற்றுக்கு உகந்தது.

தொடர்பு: V.K.P சோதி, APC வீதி, உடுவில், சுன்னாகம்.
T.P.: 077 6135593

## தவறிவிட்டது

Sony Erricson w800i, Orange colour கையடக்கத் தொலைபேசி 17.05.2007 அன்று கட்டுடைக்கும் சுதுமலைக்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி: 021 222 7454, 077 5386237
முகவரி: 277, யாழ்வீதி, மானிப்பாய்.

## வகுப்புகள்

க.பொ.த சாதாரணதரத்தில்
English , கணித பாடங்களில்
அதி விசேட சித்திபெற
பயிற்றப்பட்ட, அனுபவம்மிக்க
ஆசிரியரினால் குழுவாகவும்
தனியாகவும் பகல் நேர வகுப்புகள்
நடத்தப்படுகின்றன.

நேரம்: மு.ப 8 - நண்பகல் 12
T.P.: 077 6449899
தொடர்புகளுக்கு:
இல. 193, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(60701)

## துளிர்கள் நிறுவனத்தின் தொழில் பயிற்சிநெறி

★ தையல், சிகையலங்காரம், வொன்டன் ஐசிங், மணப்பெண் அலங்காரம், (F) பேசியல், கெயர் கட்டிங், பெயின்ரிங், சாறிவேலைப்பாடு, பொட் பெயின்ரிங், தச்சுவேலை ஆகிய குறுகிய கால சான்றிதழ் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது.

*அழகுக்கலை நிபுணர் பற்றிக் குயின்ரா*

★ தையல் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்குரிய பொருள்செலவுகள் நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை 30.05.2007 இற்கு முன்பு அனுப்பி வைக்கலாம்.

★ தொழில் புரிபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள்.

இல்.47, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம். (60717)

இயக்குநர்
துளிர்கள்.

## SKY COMPUTERS (PVT) LTD.

No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 Fax: 021 - 2229109
Affiliated with Irish International University (U.K)

Diploma Courses

| | |
|---|---|
| *MS Office* | *2 Month* |
| *Desk Top Publishing* | *2 Month* |
| *Computerized Accounting* | *2 Month* |
| *Hardware Technology* | *2 Month* |

Internet & Email 2weeks. Only 1000/-

Certificate courses

| | |
|---|---|
| Ms Word 2003 XP | Adobe Pagemaker 7.0 |
| Ms Excel 2003 XP | Adobe Photoshop 9.0 |
| Ms Access 2003 XP | Corel DRAW 12.0 |
| Ms Power Point 2003 XP | |

தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்

E - mail : skycomputers_2@yahoo.com

*Today you learn Tomorrow you lead*

இணுவில் அருள்மிகு
## ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்
## தீர்த்த உற்சவம்

காலம்:- சர்வசித்து வைகாசி 7ஆம் திகதி நாளை (21.05.2007) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும்.

நாதஸ்வர தவில் கச்சேரி சிறப்பு அம்சமாக நடைபெறும்.

தீர்த்த உபயகாரர்கள்.

(60722)

## கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பட்டப்படிப்பு
## BECOME A DOCTOR (MD Medicine)

இலங்கை அரசாங்கத்தினாலும், உலக சுகாதார நிறுவனத்தினாலும் (WHO) ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகவும் பிரபல்யமான உலக மற்றும் இலங்கைத் தமிழ் மாணவர்கள் அதிகம் படித்துக் கொண்டிருக்கும் ரஷ்யா (Russia), பெலாரூஸ் (Belarus) பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று டாக்டராகுங்கள்.

* A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்
* O/L மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்
* வங்கி நிலுவைகள், தூதரக நேர்காணல் தேவையில்லை
* அங்கிருந்து வேறு நாடுகளுக்கு செல்ல அறிவுரைகள்/ ஏற்பாடுகள்
* ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உறவினர்கள் இருப்பவர்களுக்கு இலகுவாக அங்கு செல்ல ஏற்பாடுகள்.
* பெண்களுக்கு அதிக பாதுகாப்பு, விடுதி ஏற்பாடுகள் (தாய் 2 - 3 மாதங்கள் மாணவியுடன் தங்கியிருக்கவும் விசேட ஏற்பாடுகள்)

**ரஷ்ய தூதரகத்தினால்
VISA நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கு
விசேட ஏற்பாடுகள்**

உலகத் தரத்திலான வைத்திய கல்வியை ஐரோப்பிய நாகரிகம் - பண்பாடு, செழுமையான பாரம்பரியங்கள் மிகுந்த ஜேர்மனி, போலந்து நாடுகளினால் சூழ்ப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பெறுங்கள்.

OVERSEAS STUDENT PROGRAMME (Office Of the Sri Lankan Co-ordinator)

2, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
1, முதலாம் குறுக்கு, பிள்ளையார் கோயில்வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு : Dr. Mylashan 0777 250555
(மாலை 7 மணிக்கு பின்பு 021 222 8247 இலும் தொடர்பு கொள்ளலாம்)
E - mail - mylash@gmail.com. மட்டக்களப்பு - 065 2224872.
பி. குறிப்பு: தொலைபேசியில் முன் அனுமதிபெற்று சந்திக்கவும். (606..)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 20 |
| 01 | 04 |
| 1933 | 2007 |



காங்கேசன்துறையைச் சேர்ந்த
### திருமதி ஆறுமுகம் கற்பகம்

கடந்த 20.04.2007 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது தாயாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (20.05.2007) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புகையிரத வீதி,
கோண்டாவில். (60708)

ஆ.ஜெயதாசன் (பேபி -மகன்)
குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. சி. கணபதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற வனபரிபாலன இலாகா உத்தியோகத்தர்)
அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி



ஆண்டுகள் நான்கு ஆனதம்மா!
ஆறவில்லை எம் துயரம்
நீண்ட தூரம் செல்வீர் என
நினைத்திருக்க வில்லையம்மா!
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
எம் மடியில் தவழ்ந்திடுவீர்
எம் தாயே!

மலர்வு: 03.05.1935
உதிர்வு: 04.06.2003
திதி: சதுர்த்தசி (20.05.2007)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (60695)

குடும்பத்தினர்.

## Faculty of Science, University of Jaffna
## RESEARCH ASSISTANTSHIP

Applications are invited for the post of full time research assistant in a project at the Department of Zoology, University of Jaffna on " Systematic and Population dynamics of squids in Northern coastal waters of SriLanka" under NSF research grant. Candidate should have obtained B.Sc. degree in biological science from a recognized University.

An application should reach Dr.Mrs.S.Kuganathan, Senior Lecturer, Department of Zoology, University of Jaffna (T.P.: 021 2225925; E-mail: sivashanthini@ifn.ac.lk) on or before 03.06.2007. Selected candidate will register for a postgraduate degree and is entitled to receive Rs. 15,000/- per month and travel allowances

16th May 2007 (C/52429) **Registrar.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வந்த நிதி திரும்பிப் போகாமல் இருக்க என்ன செய்யலாம்?

''மானிப்பாய் பிரதேச சபைக்கு ஒதுக்கிய நிதி திரும்பிச் சென்றது'' என்ற தலைப்பில் வெளியாகிய உதயன் செய்தியைத் தொடர்ந்து மக்கள் மன்றம் ''இதற்கு பொறுப்பு யார்?'' என்ற கருத்து தொனிக்க 13.05.2007 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் கேள்வி ஒன்றினை எழுப்பியிருந்தது.

மேற்படி நிதியினை பயன்படுத்துவதற்கான நிர்மாணத் தொடர்பாடல்களில் ரூலின்ஸ் நிறுவனம் பங்குகொண்டதன் நிமித்தம் ஒதுக்கிய நிதி திரும்பிப் போனதற்கான எமது கருத்துக்களை மக்கள் மன்றத்திற்கு சமர்பிக்க விரும்புகிறோம்.

21.04.2006ஆம் திகதி உதயன் பத்திரிகை மூலம் கூறுவிலை கோரப்பட்டு 23.05.2006 திகதி திறக்கப்படவேண்டிய கூறுவிலையானது ஒப்பந்த ஆவணங்களிலிருந்த முக்கியமான பாரதூரமான தவறுகள் எம்மால் சுட்டிக்காட்டப்பட்டதன் விளைவாக அவை திருத்தப்பட்டு 23.06.2006 ஆம் திகதி திறக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானது.

இத்தாமத்திற்கு யார் பொறுப்பு?

ஒப்பந்த ஆவணங்களைத் தயாரித்தளித்திருந்த அரச அதிபரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்த கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றின் பொறியியலாளர் ஒருவரின் பொறுப்பற்ற தன்மையினாலேயே இந்த நிகழ்வு ஏற்பட்டிருக்கலாம்.

தொடர்ந்து கூறுவிலை கோரலில் இரு நிறுவனங்கள் மட்டுமே பங்கேற்றிருந்தன. ஆகக் குறைந்த தொகை கூறிய 'ரூலின்ஸ்' நிறுவனத்தினை, காலங்கடந்த ஞானம் பெற்று 13.09.2006ஆம் திகதி கேள்வித் தொகையைக் குறைக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றிற்கு பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் அழைத்திருந்தார்கள்.

இத்தாமத்திற்கு யார் பொறுப்பு? 'உதயன்' மூலமே அது வெளிப்பட்டாகவேண்டும்.

மேற்படி உரையாடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக இவ் வேலையினை எடுத்துச்செய்ய சம்மதிக்கிறோம் என்பதினை நாம் இக்கலந்துரையாடலினை ஒழுங்கு செய்திருந்த பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அவர்கள் தம் சார்பில் கலந்துகொண்ட அதிகாரியூடாக எழுத்து மூலம் அறிவித்திருந்தோம்.

அதன் பின்னர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏன்?

கலந்துரையாடலின்போது அரச அதிபர் சார்ப்பில் வரவிருந்த அதிகாரி ஒருவர் ஒரு மணித்தியாலய தாமதத்தின் பின்னரும் வராதபடியால் இக்கலந்துரையாடல் ஏனையோரின் பங்களிப்புடன் இனிது முடிவுற்றது.

ஓர் அதிகாரியின் சமூகமின்மை இக்கலந்துரையாடலினைப் பூஜ்ஜியமாக்கிவிட்டதா?

பாதை மூடப்பட்ட நிலையிலும் எங்களிடம் அப்போது கைவசமிருந்த சிமெந்தினை பயன்படுத்தி நிதி திரும்பவிடாமல் கை கொடுத்துதவ நாம் முன்வந்தும் அதனை

**மக்கள் மன்றம்**

உதாசீனப்படுத்தியது ஏன்??

இதற்கான காரணத்தினை மக்கள் மன்றமே தீர்மானிக்கட்டும்...!

நிற்க -

இப்பணம் திரும்பிப் போகிறதே என்று அப்போது கவலைப்பட்ட ஒரேயொரு குடிமகன் எமது அறிவுக்கு எட்டிய விதத்தில் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளரேயாவார்.

வருமுன் (போகுமுன்) காப்பதினை விட்ட பிறகு, வந்தபின் (போனபின்) முயற்சிப்பதினை குறைவாக மதிப்பிடவேண்டியிருப்பினும் அம்முயற்சியினைப் பாராட்டியாக வேண்டும்.

மானிப்பாய் நிதி மட்டுமல்ல, ஏனைய நிதிகளும் திரும்பிச் சென்றுள்ளன என்று பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருந்தோம். எதிர்காலத்தில் இவ்விதமான நிகழ்வுகளை, உண்மையில் மக்களுக்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்க்க வேண்டுமானால் மதிப்புக்குரிய அரச அதிபரின் கீழ் அரச ஊழியர்களும் அவர்கள் தவிர்ந்த பொது மக்களின் பங்களிப்பாக நிர்மாணத்துறையில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக செயற்றிட்டக் குழு ஒன்றினை இயங்கவைத்தால் யாவும் சௌக்கியமாகும் என்பது எமது நம்பிக்கை.

அதிகாரிகள் தமது கட்டுப் பாட்டிற்குள் இயங்கும் ஊழியர்களை மட்டும் உள்ளடக்கியதான குழு வொன்றினை அமைத்து வேலை களின் முன்னேற்றத்தினை காணத் துடிப்பது விழலுக்கிறைத்த நீராகும் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

*ரூலின்ஸ் நிறுவனம்*
*யாழ்ப்பாணம்.*

## பரு. மெதடிஸ்த பாடசாலையின் ஆண்டுவிழவையொட்டிய போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 20

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 185ஆவது ஆண்டு விழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி வடமராட்சிப் பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் மாணவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபருக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கட்டுரைப் போட்டி, இசைப் போட்டி, வலை பந்தாட்டப்போட்டி, கும்மிப்பாடல் போட்டி போன்றன நடத்தப்படவுள்ளன.

கட்டுரைப் போட்டியில் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் 'தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை'' என்னும் தலைப்பிலும் கீழ்ப்பிரிவு மாணவர்கள், பாரதியார் கண்ட புதுமைப் பெண்' என்ற தலைப்பிலும் மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் மெதடிஸ்த திருச்சபையினரின் வருகையால் வடமராட்சி மாணவர்களிடையே ஏற்பட்ட கல்வி வளர்ச்சி என்ற தலைப்பிலும் ஆக்கங்களை எழுதி அனுப்புதல் வேண்டும்.

வலைப்பந்தாட்டப் போட்டி, குழுப்போட்டிகள் முறையே அடுத்த மாதம் 2ஆம், 8ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு பாடசாலையில் இடம்பெறும் என்று பாடசாலை அதிபர் திருமதி எஸ். சுந்தரேசன் தெரிவித்துள்ளார். (203)

## சட்டவிரோதமாக மாடுவெட்டிய நான்கு பேர் விளக்க மறியலில்

யாழ்ப்பாணம், மே 20

மல்லாகம் பழைய நீதிமன்றத்திற்கு அருகாமையில் நள்ளிரவு நேரம் சட்டவிரோதமாக பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டினர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நள்ளிரவு வேளை இப்பகுதியில் மாடு வெட்டப்படுவதாக் கிடைத்த தகவலை அடுத்தே பொலிஸார் அங்கு சென்று அவர்களைக் கைது செய்தனர்.

இவர்களை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டபின்னரே அவர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சினையுற்ற நிலையில் வெட்டப்பட்டிருந்த மாடு மல்லாகம் மயானத்தில் புதைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(203-68)

## விலங்கு விசர்நோய் தடுப்புக் கருத்தரங்கு

வலி. தென்மேற்கு, மே 20

பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் எதிர்வரும் 28ஆம் திகதிமுதல் அடுத்தமாதம் 5ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது. (203-135)




எழுத்தாளர் பொ. சண்முகநாதன் ''உதயன்'' இதழ்களில் 'சண் அங்கிள்' என்ற பெயரில் எழுதிய நகைச்சுவை கட்டுரைகளின் இரண்டாவது தொகுப்பு நூலான 'சிரிப்போம் சிந்திப்போம்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

மணிமேகலைப் பிரசுரத்தினர் கொழும்பில் வெளியீட்டு வைத்த 40 நூல்களின் இந்த நூலும் ஒன்றாகும்.

வெளியீட்டு நிகழ்வில் நூலின் முதற்பிரதியை கலைஞர் பி.எச். அப்துல் ஹமீத்திடம் இருந்து ''கிருஷ்ஷோ மல்ரி ரேட்ஸ்' பணிப்பாளர் பொ. பால கிருஷ்ணன் பெற்றுக்கொள்வதையும் மணிமேகலை ரவி தமிழ்வாணன், நூலாசிரியர் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் பார்வதவர்த்தினி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புதிதாக அமைக்கப் பெற்ற சப்பரத்தில் அம்பாள் வெளிவீதியுலா வலம் வருவார்.

30ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள்காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

* * *

வட்டுக்கோட்டை சின்னக் கதிர்காம ஆலய பெருந் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

* * *

புங்குடுதீவு புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வாரம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் திருவிழாத் திருப்பலி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பங்குத் தந்தை அருட்திரு. பீற்றர் துரைரட் ணம் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

## பொதுநிர்வாக முதுமாணி கற்கைநெறி; நேர்முகப் பரீட்சையை மீள நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 20

யாழ். பல்கலைக்கழக பொதுநிர்வாகத் துறையில் முதுமாணிக் கற்கைநெறி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை மீள நடத்த ஏற்பாடு செய்யுமாறு பரீட்சார்த்திகள் கோரியுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் அரைவாசிப்பேர் கொழும்பு சென்று திரும்ப முடியாத நிலையில் இருப்பதால் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சை கடந்த 5 நாள்களாக நடைபெற்று முடிவடைந்துள்ளது.394 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.


அவர்கள் விண்ணப்பம் செய்து நீண்ட காலத்தின் பின்னர் நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் அனுப்பப்பட்டது.

ஆனால், நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக கொழும்புக்கு திட்டமிடல் பரீட்சை, நேர்முகப் பரீட்சை, சிகிச்சை என சென்ற பலர் உடனடியாக திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் பாதிக்கப்பட்ட பலர் நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கி உதவுமாறு யாழ்.பல்கலை நிர்வாகத்தை கேட்டுள்ளனர்.

(அ-1-95)

## நூல் வரிசை




| | |
|---|---|
| நூல் | : Paradise Life and Camp Life |
| நூலாசிரியர் | : ந.பரமேஸ்வரன் |
| மொழி | : ஆங்கிலம் |
| விலை | : ரூபா 100/- |

மனைவி: கறிகள் எப்படி?

கணவன்: நான் சின்னப் பொடியனாயிருக்கேக்க அம்மா வைக்கிற கத்தரிக்காய் வெள்ளைக் கறிக்குக் கிட்ட வராது.

இங்கே பேசுபவர் வெளிப்படுத்தும் சுவையை Nostalgia என்பார்கள். இதனை தாயக நாட்டம், பழங்கால நாட்டம் என்று குறிப்பிடலாம். அன்று அம்மாவுடன் 'இதுவும் ஒரு கறியோ' என்று சண்டை பிடித்திருக்கலாம். ஆனால் இன்றோ, கழிந்துபோன, இனித் திரும்பி வரமுடியாத இன்சுவை நாள்களாக மனதில் கிளர்ந்து எழும் நினைவுகள்! மனைவி கோபிப்பாளே என்ற நினைவுகூட இல்லாமல், வாய் இளமை நினைவை வெளியிட்டு விடுகிறது.

'வலிகாமம் வடக்கு: சுவர்க்க வாழ்வும் கூடார வாழ்வும்'' என்ற அழகொழுகும் சிறு நூலைப் படிப்பவருக்கு இந்த எண்ணம் தான் வரும். இடம்பெயர்ந்து, இளமையில் குதித்து விளையாடி ஓடித்திரிந்த மண்ணை, குளித்த குளத்தை, நீந்திய கடலைச் சென்று பார்க்கவும் முடியாத நிலை ஏற்பட்ட எவருக்கும் இந்த அனுபவம் புதியதல்ல.

'உங்களுடன் ஒரு நிமிஷம்' என்ற குறு முன்னுரையில் தான் எவ்வளவு சோகத் தைக் கொட்டுகிறார்! 'வாழ்க்கை' என்ற சொல்லின் பொருளை இழந்து, உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் என்ற பெயருடன் கூடார வாழ்வில் நாள்களைக் கழிப்போர் வட இலங்கையில் படும் அல்லல்களை அவர்களது சோகக் கதையைக் கூறுகிறது இந்நூல்.

முகவுரையில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் 165 சதுரமைல் பரப்பை அரசாங்கம் கபளீகரம் செய்து, 85 ஆயிரம் மக்களை தாம் பிறந்த மண்ணை விட்டுத் துரத்திவிட்டது. நலம்புரி நிலையங்கள் என்ற பெயரில் கிடுகுக் கொட்டில்களில் (அல்லது பதிந்த அஸ் பெஸ்ரோஸ் கூரையின் கீழ்) வெந்துகொண்டு கிடக்கிறார்கள்.

இடம்பெயர்ந்த திக்தி கூட நன்றாக நினைவிருக்கிறது, 16.06.1990 புண்ணிய தலங்களில் பெயரைத் தேவாரங்களில் அடுக்குவது போல, ஆசிரியர் தமக்குப் பரிச்சயமான கிராமங்களின் பெயர்களை அடுக்குகிறார் - ஒன்றா, இரண்டா? பதினொன்பது. 28 ஆண்டுகள் உலாவிய மண்ணை நினைத்தாலோ? இடம் பெயர்ந்தே 18 வருடம் ஓடிவிட்டதே!

கீரிமலை! எவ்வளவு இனியஇடம். அதன் கோயில், குளம், இராசநாயக முதலியாரின் குறிப்புகள், சிறாப்பர்மடம், அங்கு பருகக் கொடுக்கும் மோர், மனிதருக்கு மட்டுமா? மாடு, ஆடுகளுக்கும் தொட்டி நிறைய நீர்! என்ன தியாக உள்ளம்!

கீரிமலை இறந்தோருக்கு அந்தியேட்டி செய் யும் புண்ணிய ஸ்தலம். நம்நாட்டின் காசி. மகாத்மா காந்தியின் புனித அஸ்திகூட அங்கு கரைக்கப்பட்டதாம்!

கீரிமலையில் விடுமுறை கழிக்க வீடுகள் கட்டிய யாழ்ப்பாணப் பிரமுகர்கள்! சுந்தரலிங்கம் பேராசிரியர், பார் குமாரகுலசிங்கம் பழமைக்கும் புதுமைக்கும் எடுத்துக்காட்டாக அவர்கள் மாளிகைகள். யுத்தம் செய்ய அழிவு.

நீந்தப் பழகுவோரின் சுவர்க்கம் கீரிமலைக் கேணி, தேங்காய் ஒல்லி, காற்றடித்த ரியூப் நீந்துவோருக்குரிய உதவிக் கருவிகள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி கேணி. கோயில் அயலில் உள்ள மடங்கள், சமாதிகள், பூசை, யோகப் பயிற்சி எத்தனை எத்தனை மறக்கப்பட்ட புதினங்கள் நிறைந்த நூல். இடையில்தம் பாட்டன்மாரின் வாழ்க்கை முறை பற்றிய விவரங்கள். சமூகவியல் மாணவர்களுக்குப் பெருவிருந்து. புலம்பெயர்ந்தோர் வாசித்தால் மகிழ்ச் சிக் கடலில் மூழ்குவர்.

கிராமப் பழக்கவழக்கங்கள், வேப்பங்குச்சியால் பல் துலக்குவது உட்பட கிராம இந்து சமய விழாக்கள், விரதங்கள், கோயில் பிரசாதம். கீரிமலையில் வசித்த வெளிநாட்டு, உள்நாட்டுச் சுவாமிகள் மிருக பலி, எத்தனை செய்திக் குவியல்கள்!

பொருளாதார நிலை, தொழில்கள், கைத் தொழிற்சாலைகள் (தனியார்துறை, பொதுத் துறை), விமான நிலையம், பழைய புகையி ரத நிலையம், அயலில் உள்ள கல்லூரிகள், பொழுது போக்குகள், வண்டிச் சவாரி சுருக்கச் சொன்னால் பரமேஸ்வரன் 'தான் அணி செய்யாதது எதனையும் தொடவில்லை' என்று முடித்துவிடலாம்.

இவ்விமர்சகருக்கு ஒரே ஒரு ஆதங்கம்: இவர் எப்பொழுது இதில் உள்ள ஒவ்வொரு பத்தியையும் ஒவ்வொரு அத்தியாயமாக விரித்து எழுதுவார் என்பது தான்.

*ஆ. சபாரத்தினம்*
*(நாரந்தனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், உடு புடைவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**
259, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. : 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே: 7310

## அறிவித்தல்
## உசன் கந்தசாமி கோவில் மகோற்சவ விஞ்ஞாபனம்

நிகழும் சர்வசித்து வருடம் வைகாசி எட்டாம் நாள் செவ்வாய்க்கிழமை (22.05.2007 ஆங்கிலத் திகதி) முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்ற வைபவத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து (10) தினங்கள் திருவிழா நடைபெறும்.

அடியார்கள் வருகை தந்து முருகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

தர்மகர்த்தா.
(60730)

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய், கோவில்பற்று இந்துசமய விருத்திச் சங்க பாலர் பாடசாலையை நடத்தி வரும் மானி.கோ.ப. இ.ச. விருத்திச் சங்கப் பொருளாளர் ஆகிய

**அமரர் சின்னப்பா சிவராஜலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்,
முன்பள்ளிச் சிறார்கள்.
(60736)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை வர்த்தக ஆசிரியர்
நாகராசா பிரபாகரன்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் முருகேசு நாகராசா**

(லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர், இந்திய, இலங்கை பத்திரிகைகளின் முகவர் - நெல்லியடி)
அவர்களின் மறைவைக் கேள்வியுற்று பாடசாலைச் சமூகம் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்துள்ளது. அவரது ஆத்மா சாந்தி பெற எல்லாம்வல்ல கருணைம்பதி மூத்தவிநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்,
கரவெட்டி.
(சு/52451)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஆ.இராஜகோபால்**
(செம்பியன் செல்வன்)

மலர்வு: 01.01.1946
உதிர்வு: 20.05.2005

காதலெல்லாம் காம இதழ் நெருப்பில்
கருகும் மகரந்த பொடி வரையோ - காம்போ
சுமை தாங்கும் காயாய், கனியாய்
காலங்கள் அதற்கே தலை சாய்க்கும் - கவிஞர் சத்யா

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிற்கின்றாய்
மடல் வெட்டி பார்க்கையில் கானல் நீராய் போகின்றீர்
நீர் கலந்த காற்றை சுவாசிக்கையில் குளிர்ச்சியாய் வருகின்றீர்
என் பெருமூச்சில் நீர்வெந்து அனல் மூச்சாய் போகிறீர்
ஆண்டுகள் இரண்டாயின உன் நினைவுதான்
வரண்ட வாழ்விற்கு கண்ணீராய் இருக்கிறது.

அத்தியடி,
யாழ்ப்பாணம்.
புவனேஸ்வரி (மனைவி), இராகுலன் (மகன்).
(60709)

## இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேச அலுவலகம்
### மின்சிட்டை பற்றிய அறிவித்தல்

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மின்சிட்டை விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டது. இதுவரை தை மாதம் 2007ஆம் ஆண்டுக்கான மின்சிட்டை வழங்கப்பட்டுவிட்டது. நிலுவைப் பணம் முழுவதையும் 15 நாள்களுக்குள் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் உங்கள் மின்னிணைப்புக்கள் மறுஅறிவித்தலின்றித் துண்டிக்கப்படும். மின்னிணைப்பு துண்டிக்கப்படுமாயின் மீள மின்னிணைப்புக் கட்டணமும் சேர்த்து அறவிடப்படும். தொடர்ந்து வரும் மாதங்களுக்கான மின் சிட்டைக்குரிய பணத்தை மின்சிட்டை கிடைத்தவுடன் செலுத்தி ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**சட்டவிரோத மின்பாவனையாளர்களுக்கான அறிவித்தல்**

அண்மைக் காலமாக சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் அனாவசிய உயிர் இழப்புக்களும், மின் தடைகளும் ஏற்படுவதுடன் மின்சார சபைக்கு பாரிய நட்டம் ஏற்படுகின்றது. எனவே இவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
2007.05.17

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.
(சு/52446)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 67, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.
(60744)

## காணி விற்பனைக்கு

மல்லாகத்தில், கே.கே.எஸ் வீதிக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 242198
(60536)

## விற்பனைக்கு

Sony T.V. கலர் 21" - 01
கணனி மேசை (சிறிது) - 01
மேசை பின் - 01 விற்பனைக்குண்டு.

தொடர்பு: K. நாதன்
கச்சாய் வீதி, கொடிகாமம்
0776393417
(60726)

## தவறிவிட்டது

கோபாலகிருஷ்ணன் கிருஷ்ணமூர்த்தி என்பவருடைய மோட்டார் சைக்கிள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் ஆவணங்களும் நவாலிக்கும் யாழ். மையப்பகுதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து, ஒக்போட் ரேடர்ஸ், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். T.P.: 077 6567580

## நாய்க்குட்டி விற்பனைக்கு

மூன்று மாதம் நிரம்பிய தூய இன டோமஸ் பிஞ்சர் அல்சேஸிஸ் குறோஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
முகவரி: No.6, நந்தாவில் ஒழுங்கை
(இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை பின் வீதி)
கொக்குவில் கிழக்கு .
பார்வையிடும் நேரம்: மு.ப. 11 மணி - 12 மணிவரை
மாலை 4 மணி - 6 மணிவரை

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளியில் பாடசாலைகளுக்கு அருகில் பயன்தரு மரங்களுடன் 3½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 158, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி. 222 8302
(60737)

## விற்பனைக்கு

யாழ்.பிறவுண் வீதியில் நாவலர் வீதிக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி மற்றும் 2¼ பரப்பு வீட்டுடன் கூடிய காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0112505110
(60733)

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (ஐஸ்) விற்பனைக்குண்டு.
புத்தம்புதிய 8'x 3' double door Haier deep freezer உடன் விற்பனைக்குண்டு.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(60808)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர், யமுனா வீதியில், நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள ஏழு (7) பரப்புக் காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: அ.பரமேஸ்வரன்,
689, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (தொ.பே. 222 8126)
சந்திப்பு:- பி.ப. 5 மணிக்குப் பின்னர்.
(60749)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்!




## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

கொழும்பு - யாழ் விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.
மேலதிக விவரங்களுக்கு:
EURO GROUP
[illegible]
011 4542190
(சு/52441)

## கலாலயா

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

தற்போது ஆரம்பமாகியுள்ள புதிய பயிற்சி நெறிகளுக்கு பின்வரும் பிரிவுகளுக்கு மேலும் அனுமதிகள் உண்டு

- கேக் ஐசிங் ❖ கூந்தல் அலங்காரம் ❖ உணவு தயாரித்தல் (சனி, ஞாயிறு பிரிவு)
- Fabric Painting ❖ கைவேலை ❖ பூவேலை (திங்கட்கிழமை மட்டும்)
- அடிப்படை தையல் பயிற்சி ❖ சாறிபிளவுஸ் ❖ சுரிதார் ❖ விரும்பிய உடைகள் (சனி, ஞாயிறு பிரிவு, கிழமைநாள் பிரிவு)

மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1 மணிவரை அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சண்முகம்
**திலகவதி**
(வேலணை மேற்கு, வேலணை)

மலர்வு: 04.03.1930
உதிர்வு: 20.04.2007

நிறைகுடமாய் இருந்தாய்
அம்மா
குறைவிலா வாழ்வு தந்தாய்
கறையில்லா உன் பணியால்
இறையடியை நீ சேர்ந்தாய்

தேம்பியழ வைத்துவிட்டு
தேவடி நீ போனாய் - அவளைக்
கூப்பித் தொழுகின்றோம்
கொடுத்திடு சாந்தி என்று!

வேலணை மேற்கு,
வேலணை (60549)
என்றும் உங்களின் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பா சிவராஜலிங்கம்



நவாலியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை, புக்கைதின்னிப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிமாகவும் கொண்ட சின்னப்பா சிவராஜலிங்கம் கடந்த 16.05.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை.
தொ.பே: 021 2223472 (60738)

தகவல்:
பிள்ளைகள்: கல்யாணி,
கலைவாணி, சாந்தன்.

### பொன்னம்பலம் முத்துக்குமாரசாமி

(ஓய்வுபெற்ற பாதுகாப்பு பரிசோதகர் - புகையிரதத் திணைக்களம்)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் முத்துக்குமாரசாமி அவர்கள் 18.05.2007 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான பொன்னம்பலம் - நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் நாகலிங்கம் - இரத்தினவல்லி தம்பதிகளின் கனிஷ்ட மருமகனும் திருவருட்சக்தியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (பரிசோதனை முகாமையாளர், இ.போ.ச.(வ), கோண்டாவில்), கிருபாலினி, தேவகி, தயாபரி (ஆசிரியை, யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வித்.), குமுதினி (ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வரா வித்.), விஜியலட்சுமி (ஆசிரியை, யா/ கைதடி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை),கௌரி (ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வரா வித்.) ஆகியோரின் அன்புத் தந்தையும் யமுனாமலர், கந்தப்பசேகரம் (ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்-சாவகச்சேரி), அமரர் சிவசம்பு, அமரர் சூரியகுமாரன் மற்றும் சந்திரமோகன் (உரிமையாளர் - Bluelines நிறுவனம் - திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜனகரூபன் (கொழும்பு), ஐங்கரன் (முதலாம் வருட விஞ்ஞான பீட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), பரதகுமரன் (தேசிய பயிலுநர் சபை, இ.போ.ச., கோண்டாவில்), கங்காசுதன் (மாணவன்- யாழ். இந்துக் கல்லூரி), சிவஞானம் (எஞானம்ஸ் பிரிண்டேர்ஸ், கந்தர்மடம்), சிவச்செல்வி (முதலாம் வருட ஆசிரிய மாணவி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை), சிவரூபன் (சிலிங்கோ ஆயுட் காப்புறுதி குழுத்தலைவர்), சிவகஜன் (மேற்பார்வையாளர், Ruhlins), சிவலக்ஷ்மன் (மாணவன், யா/கைதடி விக்னே. வித்.),செந்தூரன் (U.K. Sun micro system INC-USA, U.K. University West minister), கோகுலறமணன், மயூரன் ஆகியோரின் பாசமிகு பேர னும் அமரர்களான சிவபாக்கியம் மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்று, அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஊத்தல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பிள்ளையார் கோயில் வீதி,
கைதடி தெற்கு, கைதடி.
(60747)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தீர்வு எந்த மார்க்கத்தில்? கொழும்பே தீர்மானிக்க வேண்டும்

*"இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை ஒற்றையாட்சி மூலம் தீர்க்கலாம் என இலங்கையின் தற்போதைய அரசு எண்ணுகின்றது. இருப்பினும் ஒற்றையாட்சியின் அர்த்தத்தை அதனால் தெளிவுபடுத்த முடியவில்லை"*

- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார் இந்தியாவின் முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரியும் இலங்கை விவகாரத்தில் நன்கு பரிச்சயமானவருமான கேணல் ஆர்.ஹரிஹரன். இலங்கையில் செயற்பட்ட இந்திய அமைதிப் படையில் ஒரு முக்கிய அதிகாரியாகப் பணிபுரிந்தவர் ஹரிஹரன். அப்போது இந்திய அமைதிப் படையின் தளபதியாக இருந்த ஜெனரல் கல்கட்டின் புலனாய்வுப் பிரிவுச் செயலாளராகக் கடமையாற்றியவர் அவர். அத்தோடு அவரது நெருங்கிய உறவினர்கள் இலங்கையில் அரச சேவையில் உயர் பதவிகளில் இருந்தவர்கள். அதனால் இலங்கை விவகாரங்களில் நெருங்கிப் பழகியவர் ஹரிஹரன். இக்காரணங்களினால் இலங்கை அரசியல் போக்குக் குறித்து நேரடியாக அவர் அதிகம் அறிந்துகொண்டவர்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு ஒன்றைக் காண்பதாயின் அந்தத் தீர்வுக் கட்டமைப்பு - அதாவது அதிகாரப் பரவலாக்கல் - எந்த வகையில், எந்த மட்டத்தில் அமையவேண்டும் என்ற இரண்டு பிரச்சினைகள் - அம்சங்கள் - அதில் இருக்கின்றமையைக் காணமுடியும்.

எந்த வகையிலான தீர்வு என்பது முதல் பிரச்சினை. குறைந்த பட்சம் சமஷ்டியாவது வேண்டும் என்பது தமிழர் தரப்பின் வலியுறுத்தல். இல்லை, ஒற்றையாட்சியின் கீழ் சிங்களவர்களிடம் தமிழர்கள் அடிமைப்பட்டுக் கிடப்பதை மாற்றவே முடியாது என்பது தென்னிலங்கையின் பிடிவாதம்.

இரண்டாவது எந்த மட்டத்தில் அதிகாரப் பகிர்வு அல்லது அதிகாரப் பரவலாக்கம் என்ற பிரச்சினை. தமிழரின் பூர்வீகத் தாயகமான வடக்கும் கிழக்கும் முழு அலகாகக் கருதப்பட்டு அதற்கு அதிகாரத்தைப் பகிரவேண்டும் என்பது தமிழர்களின் வாதம். இணைந்த வடக்கு - கிழக்குப் பற்றிய வலியுறுத்தல் இங்குதான் வருகின்றது.

இணைந்த தமிழர் தாயகத்தை இரண்டு மாகாணங்களாகத் துண்டுபோட்டு பின்னர் அந்த மாகாணங்களை பல மாவட்டங்களாகக் கூறாக்கி அந்த மாவட்டங்களுக்கும் அவற்றின் கீழ் இருக்கும் சிறிய அலகுகளான கிராமங்களுக்கும் அதிகாரத்தைப் பரவலாக்குவது குறித்து தென்னிலங்கை அரசு பிரஸ்தாபிக்கின்றது. மாவட்ட சபை, பஞ்சாயத்து முறை பற்றியெல்லாம் கூறப்படுவது இந்த அடிப்படையில்தான்.

ஆக, இனப்பிரச்சினைக்கான அமைதித் தீர்வு எந்த வகையில் எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் தமிழர் தரப்புக்கும் தென்னிலங்கைச் சிங்களத்துக்கும் இடையில் இட்டு நிரப்பவே முடியாத பெரும் இடைவெளி துலாம்பரமாகத் தோன்றுகின்றது.

இந்த இரு தரப்புகளினதும் கருத்தியல் நிலைப்பாடுகளை ஆழ்ந்து நோக்குபவர்களுக்கு, என்றுமே நெருங்கி வரமுடியாத - ஒன்றையொன்று சந்திக்கவே இயலாத - வெவ்வேறு பர்தைகளிலும் திசைகளிலும் பயணிப்பவையாக - தமிழரின் எதிர்பார்ப்பு, அபிலாஷை, இலக்கு என்பனவும், மறுபக்கத்தில் சிங்களவரின் ஆகக் கூடுதலான விட்டுக்கொடுப்புக்கான தாராளம், இணக்கம் என்பனவும் அமைந்திருக்கின்றமை புலனாகும்.

ஒற்றையாட்சிக்குள் கிராம(பஞ்சாயத்து) மற்றும் மாவட்ட மட்ட அதிகாரப் பரவலாக்கம் குறித்து கொழும்பு பிரஸ்தாபிப்பதால்தான் ஒற்றையாட்சி குறித்தும் இலங்கைக்கு தெளிவான நிலைப்பாடு இல்லை என்கிறார் இராணுவப் புலனாய்வாளர் ஹரிஹரன்.

இப்படித் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யாத - பேரினவாத அடக்குமுறைப் போக்கைப் பிரதிபலிக்கின்ற - உருப்படியற்ற - உப்புச்சப்பற்ற - யோசனைத் திட்டத்தை தென்னிலங்கை தீர்வுக்கான ஆலோசனையாக முன் வைத்து அதில் பிடிவாதமாக நிற்குமானால், தனிவழிபோவதைத் தவிர தமிழருக்கு வேறு மார்க்கம் ஏதுமில்லை.

தமிழரின் பாதை எது என்பதை தென்னிலங்கை சிங்களத்தின் விட்டுக்கொடுப்புப் பற்றிய நிலைப்பாடுதான் தீர்மானிக்கப்போகின்றது.

ஆகவே, பந்து தென்னிலங்கையின் களத்தில்தான். அமைதித் தீர்வு முயற்சியை அது எப்படி கையாளப்போகின்றதோ அதைப் பொறுத்து தமிழர் தரப்பின் பாதையும் போக்கும் அமையும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்லவே!

# சேது சமுத்திரத் திட்டமும் இராமர் அணையும்; இந்திய நாடாளுமன்றில் பெரும் சர்ச்சை

புதுடில்லி,மே20

சேதுசமுத்திரத் திட்டத்தின் காரணமாக இராமர் அணை தகர்க்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டி இந்திய மக்கள் சபையில் பாரதீய ஜனதாக் கட்சியினர் கூக்குரலிட்டு குழப்பம் விளைவித்தனர். அதனால் சபை கடந்த புதன்கிழமை முழுநாளும் ஒத்திவைக்கப்பட்டது.

சேது சமுத்திரத் திட்டம் அமுலாக்கப்படுவது குறித்து கப்பல் போக்குவரத்து அமைச்சர் பாலு அறிக்கையொன்றை சமர்ப்பித்து பேசிக்கொண்டிருந்தார்.

சேது சமுத்திரத் திட்டம் காரணமாக இராமேஸ்வரத்திலுள்ள இராமர் அணை தகர்க்கப்பட்டுவிடும் என்று கூறி பா.ஜ. கட்சியினர் ஆட்சேபம் கிளப்பி கூக்குரலிட்டனர்.

இராமர் அணை என்று ஒன்று ஆதார பூர்வமாக இல்லை. அங்கே இருப்பது ஆதாம் பாலம் என்ற ஒன்றுதான் என்று விளக்கம் அளித்த அமைச்சர் பாலு, பல நூற்றாண்டு பழமைவாய்ந்த பாபர் மசூதியைத் தகர்த்தெறிந்தவர்களான ப.ஜ.கவினர் ஆதாரமே இல்லாத இராமர் பாலத்தைப் பற்றி கூக்குரலிடுவது ஏன் என்று கேட்டார்.

மேலும் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசு இந்துக்கள் உட்பட எந்த ஒரு மதத்தவர்களின் மனங்களையும் புண்படுத்தும் படியாக நடந்துகொள்ளாது என்றும் அமைச்சர் கூறினார்.

பா.ஜ.கவினர் தொடர்ந்து கூச்சலிட்டதால் சபை முழுநாளும் ஒத்திவைக்கப்பட்டது. (ப)

# கிளிநொச்சி சிறுவர் இல்லத்துக்கு தேசமான்ய கொத்தலாவல உதவி

கிளிநொச்சி,மே20

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தின் சிறுவர் இல்லத்துக்கு 6 லட்சம் ரூபா பெறுமதியான கட்டில், மெத்தைகள், படுக்கை விரிப்புக்கள் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

தேசமான்ய லலித் கொத்தலாவல இந்த உதவிகளை வழங்கியுள்ளார்.

மேற்படி சிறுவர் இல்லத்தின் தலைவரும் முன்னாள் அரச அதிபருமான தி.இராசநாயகம் விடுத்த கோரிக்கையின் பேரில் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

லலித் கொத்தலாவல தமது சரண சர்வதேச நிறுவனத்தின் நிதியில் இருந்து ஆறு லட்சம் ரூபாவை ஒதுக்கி இந்த அன்பளிப்புகளைச் செய்துள்ளார்.

இன்றைய நெருக்கடியான காலத்தில் தென்பகுதி வள்ளல்கள் கிளிநொச்சி போன்ற இடங்களுக்கு உதவப் பின்னிற்கின்ற நிலையில் தேசமான்ய லலித் கொத்தலாவல, துணிந்து முன்மாதிரியாக ஆதரவற்ற சிறுவர்களுக்கு உதவியமையையிட்டு இல்ல நிர்வாகிகளும் பொதுமக்களும் நன்றியுணர்வுடன் இவருக்கு பாராட்டினைத் தெரிவித்துள்ளனர் என்று சிறுவர் இல்லத் தலைவர் தெரிவித்தார்.

இனம், மொழி, சமயத்திற்கு அப்பால் நலிந்த மக்களுக்கு உதவுவதில் இவர் பின் நிற்கவில்லை என்பதற்கு இது இன்னொரு சான்றாகும். - என்றும் அவர் கூறியுள்ளார். (அ-1)

# சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே20

கரணவாய் உச்சிற்புவனேஸ்வரி அம்பாள் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் சமய அறிவுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த மாணவர்களை சீருடையுடன் போட்டிக்குச் சமுகமளிக்குமாறு ஆலய பரிபலான சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (203)

# வடமராட்சியின் பல இடங்களிலும் நேற்றுப் பரவலாகத் தேடுதல்

யாழ்ப்பாணம்,மே20

வடமராட்சியின் பல இடங்களிலும் நேற்றுப் பெரும் எடுப்பில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பவள், மோட்டார்சைக்கிள் மற்றும் பல வாகனங்களில் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வல்வெட்டி, வேவில், கம்பர்மலை, விதாம்பத்தை, வல்வெட்டி மாடத்தைப் பிள்ளையார் கோயிலடி, அல்வாய் போன்ற பகுதிகளில் இந்தத் தேடுதல் இடம்பெற்றது. பல இடங்களில் நிலம் கிளறிச் சோதனை செய்யப்பட்டது.

தேடுதலின் போது சில இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. (அ-202-155-115)

# வீரமணி ஐயர் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,மே20

முத்தமிழ் கலாநிதி வீரமணி ஐயர் நினைவுப் பேருரை நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் 'கானல் வரியில் காதலும் காமமும்' என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (203)

# சட்டவிரோத மணல் ஏற்றி வந்த லொறி மீது படையினர் வேட்டுக்களைத் தீர்த்து நிறுத்தினர்

## கைதான இருவருக்கும் அபராதம்

யாழ்ப்பாணம்,மே20

ஆவரங்கால் சிவன்கோயிலுக்கு சமீபமாக ஊரடங்கு வேளை வீதியைக் கடக்க முயன்ற லொறி மீது படையினர் வேட்டுக்களைத் தீர்த்து நிறுத்தியுள்ளனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த லொறி ஒன்று வீதியைக் கடக்க முனைந்த போது அதனை நிறுத்துமாறு படையினர் சைகை காட்டியுள்ளனர்.

ஆனால் அந்த லொறி நிறுத்தாமல் சென்றதை அடுத்து படையினர் அதன் மீது வேட்டுக்களைத் தீர்த்தனர். அதன் பின் லொறி நிறுத்தப்பட்டது.

அந்த வாகனம் படையினரால் கைப்பற்றப்பட்டது.

அந்த வாகனத்தில் இருந்த இருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டு அச்சுவேலிப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பிரஸ்தாப நபர்கள் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (அ-1-68)

ஆணைக்குழு விசாரணையில்

# சாட்சியமளிப்போரின் பாதுகாப்புக்கு வலுவான திட்டமொன்று அவசியம்

## வலியுறுத்துகிறது சர்வதேச மன்னிப்புச்சபை

கொழும்பு,மே20

சாட்சிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வலுவான திட்டமொன்று செயற்படுத்தப்படவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திற்குப் பிறகு இடம்பெற்றுள்ள பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட 16 முறைப்பாடுகள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணை களை ஆரம்பித்ததைத் தொடர்ந்து சாட்சியமளிப்பவர்களுக்கு பாதுகாப் பளிக்கும் வலுவான திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுவதின் அவசியத்தை மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்தி யுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினதும் மதிப்பார்ந்த சர்வதேச பிரமுகர்கள் குழுவினதும் விசாரணைகள் 16 வழக்குகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருப்பதை மன்னிப்புச் சபை குறை கூறியுள்ளது. விசாரணைகளில் மேலும் சில வழக்குகள் இணைத்துக்கொள்ளப்படக்கூடிய சாத்தியமிருந்தாலும் குறிப்பாக மிக அண்மைக்கால மனித உரிமை மீறல்களும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அது கருதுகின்றது.

**சாட்சியமளிக்கத் தயக்கம்**

விசாரணைகளில் சாட்சியமளிக்க முன்வருவதில் பலர் தயக்கம் காட்டுவதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியமளிப்பவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பிரிவுகளை நிறுவுவதற்கு விரும்புவதாக ஜனாதிபதி விசாரணைக்குழுவின் தலைவர் நீதிபதி நிஸங்க உடலாகம தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசிய பிராந்திய ஆய்வாளர் யொலொண்டா போஸ்ரர் பி.பி.ஸிக்கு வழங்கியுள்ள பேட்டியொன்றில் -

முறைப்பாடு செய்பவர்கள், சாட்சியமளிப்பவர்கள், புலன் விசாரணைகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சகலருக்கும் அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

பட்டினிக்கு எதிரான அமைப்பபின் பணியாளர் 17 பேர் கொலை செய்யப்பட்டமை, வணபிதா ஜிம்பிறவுண் கொலை மற்றும் கெப்பிட்டிகொலாவ பஸ் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை உட்பட சில முக்கிய கொலைகள் தொடர்பாக விசாரிப்பதற்கென ஜனாதிபதி விசாரணைக் குழு கடந்த செப்ரெம்பரில் நியமிக்கப்பட்டது. பின்னர் இந்தக் குழுவின் செயற்பாடுகளின் பகிரங்கத்தன்மையை உறுதி செய்யும் வகையில் அதனைக் கண்காணிப்பதற்கென சர்வதேச மட்டத்தில் மதிப்பார்ந்த பிரமுகர்கள் குழுவொன்றுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

**நாட்டின் நீதித்துறையின் ஓர் அங்கமாக விளங்கமாட்டாது**

இது பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள கருத்தில் -

சர்வதேச பிரமுகர்களின் குழு ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதாக மட்டுமே இருக்கப் போகிறது என்பது கவலை தரும் விடயம். ஆணைக்குழுவும் இலங்கை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதாக மட்டுமே இருக்கும். நாட்டின் நீதித்துறையின் ஓர் அங்கமாக அது விளங்கமாட்டாது என்று குறிப்பிட்டுள்ளது.

வலுக்கட்டாயமாக அல்லது தன்னிச்சையாகக் காணாமல்போனவர்கள் குறித்து 5,749 முறைப்பாடுகளை ஐ.நா. பணிக்குழுவினர் ஆராய்ந்துள்ளார்கள். இவைகளில் பெரும்பாலானவை 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு முறைப்பாடு செய்யப்படவில்லை என்று மனித உரிமை ஆய்வுக் குழுக்கள் தெரிவிக்கின்றன. (அ-ப)

**நாளை**

| | |
|---|---|
| வைகாசி - 7 | திங்கட்கிழமை 21.05.2007 |
| திதி: பஞ்சமி | மாலை : 06.19 |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| [illegible] | : 01.13 |
| சுபநேரம் | : 11.52 - 01.22 |
| ராகுகாலம் | : 07.22 - 08.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இனம் ஒடுக்கப்படுவதற்கும் பிரிவினைக்கும் ஐ.தே.க. இடம் தராது!

## சீனாவில் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மே 20

இலங்கையில் பெரும்பான்மை இனத்தின் அதிகாரம் மேலோங்கி, அதன்மூலம் சிறுபான்மை இன மக்களின்உரிமைகளை அடக்கி ஒடுக்குவதற்கும் சிறுபான்மைஇனங்கள் பிரிவினை வாதச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் இடம் கொடாது. இலங்கையின் தேசியப் பிரச்சினை, உரிய அரசியல் தீர்வின் ஊடாகவே தீர்க்கப்பட வேண் டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாகவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கடந்த வியாழக்கிழமை சீனாவின் தேசிய ஆலோசனை சபைத் தலைவரும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான சிங்லிங்கை சீனத் தலைநகர் பீஜிங்கில் சந்தித்து உரையாடுகையிலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க அப்போது மேலும் கூறியவையாவது:-

இலங்கையில் தேசியப்பிரச்சினை சிக்க லான நிலையில் உள்ளது. அப்பிரச்சினை யைத் தீர்ப்பதற்கான சரியான - அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய - அரசியல் தீர்வொன்று முக்கியம். எந்தச் சந்தர்ப்பத்திலும் இப்பிரச்சினைக்கு இரா ணுவ நடவடிக்கை தீர்வாக அமையாது.

பிரிக்கப்படாத நாட்டின் கீழ் இப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். பெரும்பான்மை இன மக்களின் அதிகாரம் மேலோங்கி சிறுபான்மை இன மக்களை அடக்க முற்பட்டால் இப்பிர ச்சினை மேலும் விஸ்தீரணமடையும்.

பெரும்பான்மை இன மக்களின் அடக்கு முறையைக் காரணங்காட்டி சிறுபான்மை இன மக்கள் நாட்டைப் பிரித்தெடுக்க முற் பட்டால் அதுவும் ஏற்புடையதல்ல. அது பிரச்சி னையை நீடிக்கச் செய்யும் நடவடிக்கை.

### அரசியல் தீர்வே தேவை

இந்த இரண்டு நடவடிக்கைகளுக்கும் இடங்கொடுக்காது நாட்டை ஐக்கியப்படுத்தி ஒரே நாட்டின்கீழ் அமைதிப் பேச்சின் ஊடாக எட்டப்படுகின்றஅரசியல் தீர்வின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட முடியும்.

இந்த நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் உறுதியாகவே உள்ளது. இதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் இல்லை யென்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சிக்கும் புலிகளுக்கும் இடையில் 2002இல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தம் இப்போது வலுவிழந்து காணப்படுகிறது. ஒப்பந்தத்தைப் பேண தற்போதைய அரசும் புலிகளும் உரிய நடவடிக்கை எடுக்காமை கவலையளிக்கின்றது. அதுவே தற்போதைய யுத்த நடவடிக்கைக்கு காரணம்.

ஆகவே, தற்போதைய அரசு அரசியல் தீர்வில் நம்பிக்கை கொண்டு அத்தீர்வை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது அவசியம். தவறும் பட்சத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்படுவதோடு மக்க ளும் அதிக துன்பத்தை அனுபவிக்க நேரிடும்.

### சீனாவுக்குக் களங்கம் ஏற்படுத்தும் குற்றச்சாட்டு

இதேவேளை, புலிகள் இயக்கத்திற்கு சீனா ஆயுதங்களை வழங்குகின்றது என்று மஹிந்த ராஜபக்ஷவின் அரசு குற்றம் சுமத்தியுள்ளது. சீனாவிற்கும் இலங்கைக்குமான நட்பு 50 வருடங்கள் பழைமை வாய்ந்தது.

இலங்கை அரசின் இந்தக் குற்றச்சாட்டு 50 வருட நட்புக்குள் களங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. சீனாமீது இவ்வாறு குற்றம் சுமத்துவதையும் சீனாவைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதையும் ஐக்கிய தேசி யக் கட்சி எதிர்க்கின்றது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சீனா உதவி வருகிறது. அந்த உதவி இன்னும் தொடர வேண்டும். - என்று ரணில் தெரிவித் தார்.

இதேசமயம், சீனாவின் சர்வதேச திணைக் கள அமைச்சர் டேங் சியாரேய்யையும் ரணில் சந்தித்து உரையாடியுள்ளார். சியாரே இலங்கையின் இனப்பிரச்சினையை அரசியல் தீர்வின் ஊடாகவே தீர்க்க முடியும் என்றும் எல்லாவிதத்திலும் சீனா இலங்கைக்கு முழுமையாக உதவி வழங்கும் என்றும் ரணிலிடம் கூறினார். (அ-8)

## தனிப்பட்ட தகராறு ஐவர் வெட்டிக் கொலை

கொழும்பு, மே 20

தெல்கொடவில் மீகவத்தை என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் வெட்டிக் கொல் லப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட காணிப்பிரச்சினை காரணமாக இவர்கள் கொலை செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (1-203)

## உரிமைகோரப்படாத நிலையில் பரு. நீதிமன்றில் பொருள்கள்

யாழ்ப்பாணம், மே20

பருத்தித்துறை நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத நிலையில் ஒரு தொகுதி பொருள்கள் இருப்பதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

வழக்கு ஒன்றின் சான்றுப் பொருள்களாக பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட பொருள்களை உரியவர்கள் பெற்றுக் கொள்ளு மாறு கேட்கப்பட்டுள் ளது.

கீழ்காணும் பொருள்களை 14 நாள்களுக் குள் அடையாளம் காட்டிப்பெற்றுக் கொள் ளும்படியும் -

உரிமை கோரப்படாவிட்டால் ஏலத்தில் விற்கப்படும் என்றும் -பதிவாளர் தெரிவித்தார். பொருள்களின் விவரம் வருமாறு -

★ இல.350927350109682 கொண்ட M.C. 3000 Sagem இன கையடக்கத் தொலை பேசி.

★ இல. 449142/10/221890/05 Nokia என்ற கையடக்கத் தொலை பேசி

★ Fino 15 SE கொண்டதும் இல. 52 4009575 கொண்டதுமான இன கமரா ஒன்று

★ ஆண்கள் கைக்கடிகாரம் - 1 (உடைந் தது)

★ ஆண்கள் கைக்கடிகாரம் - 1

★ பெண்களின் கைக்கடிகாம் 01

★ CCD - TRV 64 E கொண்ட Sony இன Video Camera

★ இல AC-L 10c 65321381 கொண்ட சார்ச்ஜர் (அ-1)

# தனியார் பஸ் கட்டணங்கள் ஜூன் முதலே அதிகரிக்கும்

கொழும்பு, மே 20

தனியார் போக்குவரத்துப் பயணிகளின்பஸ்கட்டணங்களைஎதிர்வரும்ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப் போவதாக தனியார் போக்குவரத்துப் பயணிகள் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்தார். இதன்படி அரசு அனுமதித்த காலப் பகுதிக்கு ஒரு மாதம் முன்னதாகவே பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இத் தகவலைத் தெரிவித்தார். நாட்டின் பண வீக்கம் அதிகரித்துச் செல்வதனால் எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து 20 சதவீதத்தால் தனியார் பயணி கள் போக்குவரத்து பஸ் கட்டணங்களை அதிகரிக்கப்படவேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் முதல் தனியார் போக்குவரத்து பஸ் கட்டணங்களை அதிகரிக்க சங்கத்திற்குப் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெருமா அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

## கம்பஹாவில் எரிந்த நிலையில் சடலங்கள் மீட்பு

கொழும்பு, மே 20

கம்பஹா மாவட்டத்தில் தொம்பே பகுதியில் அரைகுறையாக எரிந்த நிலையில் இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காண்பதற்காக ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

வேறு ஓர் இடத்தில் இருந்து கொலை செய்யப்பட்ட நிலையில் எடுத்து வரப்பட்ட இச்சடலங்கள் அப்பகுதியில் வீசப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சடலங்களை அடையாளம் காண பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ-1)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிக்கோள் குறித்து இரண்டு தரப்புகளுக்கும் விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கும் என்று அறியப்படுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் பிரிட்டிஷ் தலையீடு செய்வதாகக் கூறி ஜே.வி.பி. மற்றும்ஹெல உறுமய ஆகிய கடும் போக்குக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

ஜே.வி.பி. கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயார் என்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இவ்விவகாரம் குறித்து பேச்சு நடத்தி எழுத்து மூலம் பாதுகாப்பு உத்தரவாதம் பெறும் பொருட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க விருப்பம் தெரிவித்தார் என்றும் -

இதற்குத் தாம் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னரே ஓமந்தைப் பாதையூடான போக்குவரத்து சீராகும் என்று எதிர் பார்க் கப்படுகின்றது. (அ-1)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளையே மக்கள் நம்பியுள்ளனர்.

கப்பல்பயணத்தை மேற்கொள்வதற்கு செயலகத்தில் பதிவு செய்து பயண அனுமதியைப் பெற லாம் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதை அடுத்து யாழ். செயலகத்தில் நேற்று பெரும் எண்ணிக்கையான மக்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்கக் காணப்பட்டனர். (அ-202)


## துளிர்கள் நிறுவன அறிவித்தல்

✱ சமூக சேவைகள் நலன்புரி அமைச்சினால் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் நடத்தும் உளவளத்துணை டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் எமது நிறுவனத்திற்கு அனுப்பப்படவில்லை. தேவையானோர் குறிப்பிட்ட அமைச்சுடன் தொடர்பு கொள்ளுங்கள். இந்தக் கற்கை நெறிக்கும் எமக்கும் சம்பந்தமில்லை. தவறான அறிவுறுத்தல்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

✱ எமது துளிர்கள் நிறுவனத்தில் தற்போது உள சமூக மேம்பாட்டு பயிற்சி நெறி 3 பிரிவுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. விரைவில் தொழில் பயிற்சி நெறியும் ஆரம்பமாகவுள்ளது.

✱ **துளிர்கள்** எவருடைய வழிகாட்டலுமின்றித் தனித்துவமாக இயங்கும் சிறுவர் பெண்களுக்கான உடல், உள, சமூக மேம்பாட்டு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

**இல.47, மாட்டின் லேன், யாழ்ப்பாணம்.**

**இயக்குனர், துளிர்கள்.**


## மின் விநியோகம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு உத்தரவு காரணமாக முற்குறிப்பிட்ட நான்கு மின் பரிமாற்று நிலையங்களிலும் வழமைபோன்று மின்சார சபை ஊழியர்கள் தங்கி நின்று பணியாற்றி குறிப் பிட்ட இடங்களுக்கு மின்வெட்டை உரிய முறையில் செய்யமுடிவதில்லை என்றும் -

சுன்னாகம் மின்சார சபையினர் பிரதான செயற்பாட்டு நிலையத்தில் இருந்தே குறிப்பிட்ட மின் நிலையத்துக்கு முழுமையாக மின்சாரம் விநியோகம் தடை செய் யப்படுகின்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மின்சார்விநியோகத்தைசீராக்க இரண்டு வெளி நாட்டு நிறுவனங்களுடன் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

அவை பூர்த்தியாகிப் பணிகளை தொடங்கி மின் விநியோகத்தை சீராக்குவதற்கு அனேகமாக இவ்வருட இறுதியிலேயே சாத்தியம் என்றும் மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-1)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த விடயத்தில் அனைத்துக் கட்சிகளின் மாநாட்டு பரிந்துரைகளைக் காட்டிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பரிந்துரைகளே மிகமுக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த நிலையில் மாகாண மட்ட அதிகாரப் பரவலாக்கலை கைவிட்டு மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் அதிகாரத்தைப் பகிரும் திட்டங்களிலேயே அரசு பெரு முனைப்புடன் ஈடுபடுகின்றது. இதன்போது தமிழ்ப் பிரதேசங்களுக்கு சுயாட்சி, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு சமஅந்தஸ்து மற்றும் வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகிய மூன்று விடயங்களை அரசு தவிர்த்துச் செல்லும் போக்கில் செயற்பட்டு வருகிறது.

இலங்கை அரசாங்கம் இராணுவ மயப்படுத்தப்பட்ட அரசியல் இலக்குகள், 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ வெற்றிகள் மற்றும் ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரல் என்ற அடிப்படையிலேயே தமது முனைப்புகளை முன்னெடுத்துச் செல்கின்றது. இந்த முனைப்புகள் இராணுவ முன்னெடுப்புகள் என்ற செய்கையையே உணர்த்தி நிற்கின்றன என்று அவர் சுட்டிக் காட்டி உள்ளார். (அ-சி)

## பலத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து கிழிறங்கி பத்திரிகையாளரிடம் பேச அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்திய மீனவர்கள் கடத்தலுக்குத் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று விடுதலைப் புலிகள் முன்பே மறுப்புத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பாலமோட்டையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்திற்கு கிழக்கிலும் வவுனியா மாவட்டம் ஓமந்தைக்கு மேற்கிலும் உள்ள இராணுவ முன்னரங்கப் பகுதிகளில் இராணு வத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் குறிப்பாக பாலமோட்டை, கோவில் குஞ்சுக்குளம் உட்பட்ட பிரதேசங்களில் ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை-

மன்னார் மாவட்டம் மடு பிரதேசத்திற்கு கிழக்கே இராணுவ முன்னரங்கப் பகுதிகளில் இரு தரப்பினருக்கும் இடையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதல் ஒன்றில் 2 விடுதலைப் புலிகளும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது. எனினும் இது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து தகவல்கள் எதும் வெளியாகவில்லை. (அ-1)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org